Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 22 ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 05 (06.01.2006) வெள்ளிக்கிழமை இதழ் 98



அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

**ஸ்ரீ கருமாரி நகையகம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொ:பே: 222 5385.

## திருமலையில் கொல்லப்பட்ட மாணவர்களுக்கு ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் அஞ்சலி!



திருகோணமலை —

திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை இரவு படுகொலை செய்யப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்களின் சடலங்களும் நேற்று நண் பகல் 12.20 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களினதும் சடலங்கள் நேற்றுக்காலை 8.30 மணியளவில் அவர்களது இல்லங்களில் இருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தலில் வைக்கப்பட்டு - மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

காலை 9.30 மணிமுதல் பகல் 11 மணிவரை அஞ்சலி நிகழ்வுகளும், இரங்கலுரைகளும் இடம்பெற்றன.

கல்லூரி அதிபர் மா.இராசரத்தினம், ஆலடி விநாயக தேவஸ்தானக் குருக்கள் சுந்தரலிங்க தேசிகர், ஜனாப் சாகுல் ஹமீது, குழந்தை யேசு ஆலய பங்குத் தந்தை அருட்திரு.அன்னதாஸ் ஆகியோர் இரங்கலுரைகள் ஆற்றினர்.

சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் அஞ்சலி நிகழ்விலும், இறுதி ஊர்வலத்திலும் பங்குபற்றினர்.

பகல் 11 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்குதல் 3 படையினர் படுகாயம்!

திருகோணமலை —

திருகோணமலையில் நேற்றிரவு ரோந்து சென்ற இராணுவ வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று படையினர் படுகாயமடைந்தனர்.


திருமலை நகரிலிருந்து சுமார் 2 கி.மீ தொலைவிலுள்ள காந்திநகர் என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. நேற்றிரவு 8.05 மணியளவில் இராணுவத்தினரின் ரோந்து வாகனம் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் இராணுவ சார்ஜன்ட் ஒருவரும் இரு சிப்பாய்களும் படுகாயமடைந்து கடற்படைத்தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் அருகில் இருந்த வீட்டினுள் இருந்த 50 வயது பெண் ஒருவர் தலையில் படுகாயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# மரபுவழிப் போரே வருங்காலத்தில் நடக்கும்!

## 'ரொய்ட்டர்' பேட்டியில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கொழும்பு —

எதிர்காலத்தில் அரச படைகளுடன் ஏற்படக்கூடிய போர் மரபுவழிப் போராகவே இடம்பெறுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ரொய்ட்டர் செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்-

சமாதானத்தை நிலைநாட்டுவதில் விடுதலைப் புலிகள் உறுதி பூண்டுள்ளனர். வன்முறைகள் அதிகரித்து மக்கள்மீது அரசபடைகள் போரைத் திணிக்கும் பட்சத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான தீர்க்கமான முடிவுகளை விடுதலைப் புலிகள் எடுப்பார்கள்.

அரச படைகளின் வெறியாட்டத்தால் சீற்றமடைந்துள்ள மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் எதிரியாகவே நோர்வேயை பார்க்கிறோம்!

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு —



சமாதான முயற்சிகள் தொடர்பாக பேச்சுக்களை நடத்த நோர்வே

## புலிகளை குற்றம்சாட்டும் இராணுவம் ஆதாரங்களை எமக்கு தரவேண்டும்!

### கண்காணிப்புக்குழு கோரிக்கை

## பயிற்சி நடவடிக்கைக்காக சயுர கப்பல் புறப்பட்டது!



# விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு —



சமாதான முயற்சிகள் தொடர்பாக பேச்சுக்களை நடத்த நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுத்த அழைப்பை ஜே.வி.பி அடியோடு நிராகரித்துள்ளது.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில் -

சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையாளர் என்ற நிலையிலிருந்து நோர்வே விலகும்வரை அந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆதாரங்களை எமக்கு தரவேண்டும்!

## கண்காணிப்புக்குழு கோரிக்கை

கொழும்பு —


யாழ. குடாநாட்டில் இடம்பெற்றுவரும் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று குற்றம்சாட்டிவரும் இராணுவத்தரப்பு அதற்கான ஆதாரங்களைத் தம்மிடம் காட்டியாக வேண்டும் என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கோரியுள்ளது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ்டோட்டயர் கூறியுள்ளதாவது -

யாழ். தாக்குதல்களுக்கு புலிகளே காரணம் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறிவருகிறார். ஒவ்வொரு தாக்குதலின் போதும் புலிகளின் மீது இராணுவம் குற்றம்சாட்டி அறிக்கை விடுகிறது.

விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பிருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக்கூறும் இராணுவம் அதை எம்மிடம் கையளிக்க வேண்டும். நாங்கள் கேட்டுத்தான் அவர்கள்தரவேண்டும் என்பதில்லை. எங்களுக்காக காத்திருக்காமல் அந்த ஆதாரங்களை கையளிக்கலாம்.

இது தொடர்பாக இராணுவத் தலைமையகத்துடன் தாம் தொடர்புகொண்டு ஆவணங்களை கோரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



கொழும்பு —

அந்தமான் - நிகோபார் தீவுகளில் நடைபெறவுள்ள மிலன் 2006 கடற்படை போர் பயிற்சி நடவடிக்கையில் பங்கேற்க - இலங்கை கடற்படையின் சயுர போர்க் கப்பல் நேற்று புறப்பட்டு சென்றது.

இந்தியா உள்ளிட்ட ஏழு ஆசிய நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கும் இந்தப் போர் பயிற்சி நடவடிக்கையில் இலங்கை கடற்படையின் சயுர

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ உதவிகளை இந்தியா இலங்கைக்கு வழங்காது!

## பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி

சென்னை —

இலங்கைக்கு இராணுவ ரீதியான எந்த உதவிகளையும் இந்தியா வழங்காது என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

இலங்கையுடன் பாதுகாப்பு உடன்பாடு எதுவும் செய்து கொள்ளப்படாத நிலையில் எந்த இராணுவ உதவிகளையும் இந்தியா வழங்காது.

அத்துடன், வேறு நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் பிரணாப் முகர்ஜி மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் கிளைமோர்; இரண்டு படையினர் காயம்!



வவுனியா —

வவுனியா - தேவகுளம் என்ற இடத்தில் இராணுவத்தினர் சென்ற உழவு இயந்திரம் மீது நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர்.

வவுனியா நகரிலிருந்து வடமேற்காக 12 கி.மீ தொலைவிலுள்ள கல்மடு இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

புதுக்குளத்துக்கும் ஈச்சங்குளத்துக்கும் இடைப்பட்ட தேவகுளம் என்ற இடத்தில் நேற்றுக்காலை 9.45 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இராணுவ சார்ஜன்ட் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் செயலாளர் யாழ்ப்பாணம் வரமாட்டார்!

கொழும்பு —

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவினர் யாழ்.குடாநாட்டுக்கு பயணத்தை மேற்கொள்ள மாட்டார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் ராடன் தலைவரும் கல்வியமைச்சின் செயலாளருமான ரி.அலஸ் இருவரும் யாழ்.குடாநாட்டுக்கு பயணம் மேற்கொள்ளவிருப்பதாக சில ஊடகங்கள் தெரிவித்த போதிலும் அவர்கள் தமது பயணத்தை மேற்கொள்ள மாட்டார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# சுவர்க்கவாயில் தரிசனம்

கொக்குவில் —

நாகேஸ்வரம் அளவெட்டி தெற்கு ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறவிருக்கிறது.

அன்றைய தினம் பகல் இரவாக சுவர்க்க வாயில் ஏகாதசி விரதபூசைகள், விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறும். முற்பகல் 11 மணிக்கு நாராயணப் பெருமான் தேவியார் சகிதம் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார்.

11 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கு 1008 சங்காபிஷேகத்தைத்தொடர்ந்து 4 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (206)

# கல்வியியல் கல்லூரி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம் —

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் இறுதிப்பரீட்சை - 2005 எதிர்வரும் 16 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளது. கல்லூரியின் உள்ளகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார்.

# வகுப்பு பகிஷ்கரிப்பு

நெல்லியடி —

பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் இன்று 6ஆவது நாளாகவும் வகுப்புப் பகிஷ்கரிப்பு போராட்டத்தைத் தொடரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறையில் கடந்த 27 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவன் பா.கமலக்கண்ணன் விடுவிக்கப்படாததைக் கண்டித்தே இந்த பகிஷ்கரிப்பு இடம்பெற்று வருகின்றது. (12)

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடம்**
**பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரக்) கற்கை நெறிக்கான அனுமதி - 2006**

மேற்படி கற்கைநெறிக்கான அனுமதித் தேர்வு 12.01.2006 காலை 9.30 மணிக்கு நடைபெறும் விண்ணப்பதாரிகள் தங்கள் தங்கள் அடையாள அட்டையுடன் வரவேண்டும்.

(சி/4993) - பதிவாளர் -


நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அர்ஜுன், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
ஆணை
எமது மகத்தான பொங்கல் வெளியீடு!
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு
காட்சிகள்
10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜீத், கிரண், விவேக் மற்றும் பலர் நடித்த
வில்லன்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி, ஆனந்தராஜ் நடித்த
அய்யர் I.P.S



காட்சிகள்:-10.30,2.00மட்டும் (பு.நேரம்)


# தனியார் கல்வி நிலைய நிர்வாகியை மூன்று நாட்களாகக் காணவில்லை!

யாழ்ப்பாணம் —

நெல்லியடி மொடேன் கல்வி நிலையம், சயன்ஸ் சென்ரர் போன்ற கல்வி நிறுவனங்களின் நிர்வாகியை கடந்த மூன்று நாட்களாகக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி நவிண்டில் எனும் இடத்தைச் சேர்ந்த இராசரட்ணம் - தேவச்சந்திரன் (வயது 30) என்பவரே காணாமற்போனவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

கடந்த 30 ஆம் திகதி காலை தனியார் கல்வி நிலையத்தின் வேலைக்காகக் கூலி ஆட்களைப் பிடிப்பதற்காகத் துன்னாலை கலிகைச் சந்திக்கு அருகிலுள்ள இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள வீடொன்றிற்குச் செல்வதாகக் கூறிச்சென்ற இவர் அதன்பின் வீடு திரும்பவேயில்லை. இவரது மோட்டார் சைக்கிளும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அத்துடன் இவர் வைத்திருந்த தொலைபேசி வேலை செய்யாததையடுத்து இவரது மனைவி தயாளினி தனது கணவர் தொடர்பாக கலிகைச் சந்தியிலுள்ள இராணுவத்தினரிடம் கேட்டபோது தாம் பிடிக்கவில்லை எனக் கூறியுள்ளனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திலும், மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நேற்று யாழ்.போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.

நெல்லியடியிலுள்ள ஈ.பி.டி.பி முகாமிற்கு அருகில் உள்ள மொடேன் கல்வி நிலையத்தினை இடமாற்றம் செய்யும் நடவடிக்கையிலேயே தனது கணவர் ஈடுபட்டிருந்ததாகவும் தமது வீட்டிற்கருகில் ஒரு வாரமாக இராணுவத்தினர் இரவு வேளைகளில் திரிந்ததாகவும் அவரது மனைவி தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் மூன்று பெண் குழந்தைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

# பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட 16 சிறுவர் இல்லங்களுக்கு ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வட-கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தால் கைதடி முதியோர் இல்லத்தில் இன்று வழங்கப்படவிருந்தது.

எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் இந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும் நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் ஏற்பட்டாளர்கள் தெரிவித்தனர்.

## முகாமைத்துவ கல்லூரி மாணவர்களுக்கான அறிவித்தல்

முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப்படிப்பிற்கான (G.A.Q., B.Com) விரிவுரைகள் 31.12.2005 ஆரம்பமாகியுள்ளன என்பதையும் AAT கற்கை நெறி புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் 07.01.2006 சனிக்கிழமை மாலை 2.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

இணைப்பாளர்,
முகாமைத்துவக் கல்லூரி,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

(சி/4435)

## அந்தியேஷ்டி அழைப்பிதழ்



அமரர் மாணிக்கம் சின்னராசா

அன்புடையீர்;

கடந்த 07.12.2005 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

**அமரர் - மாணிக்கம் சின்னராசா**

அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் 06.01.2006 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு அல்வாய் பலிவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. அக்கிரியையிலும் தொடர்ந்து நிகழும் அமரரின் ஞாபகார்த்த 'ஞனதீபம்' நூல் வெளியீட்டு விழா நிகழ்விலும், தொடர்ந்து இல்லத்தில் நிகழும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி . திருமதி. சின்னராசா கமலா
மகன்மார் : சி.கௌசிகன் (ஆசிரியர்)
சி.கபிலன் (ஆசிரியர்)
சி.விமலன் (பணியாளர் - நமது ஈழநாடு)

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும். 'திரவிய பவனம்' அல்வாய்.

அமரர் மாணிக்கம் சின்னராசா

C/4978

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் ச.வேலாயுதம்பிள்ளை**

(இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், திருகோணமலை)

கூட்டுறவுத்துறையில் பழுத்த அனுபவம் மிக்க ஒருவராக பரந்த நோக்குடன் செயலாற்றியவரும், மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், கருகம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் ச. வேலாயுதம்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும், சுற்றத்தவர்களுக்கும், கூட்டுறவுத் துறை சார்ந்த நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
தெல்லிப்பழை.

(சி/4994)


Direct Start After O / L .......

1 Diploma in Microsoft Office DMO 4 months
2 Diploma in Computer Programming DCP 4 months
3 Diploma in Desktop Publishing DTP 3 months
4 Diploma in Web Design DWD 4 months
5 Diploma in Computerised Accounting DCA 3 months



Registered with Ministry of Vocational Education

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !
- 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
- அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
- ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இலவச பாடப் புத்தகங்கள்
- Transfer Facility
- தவணை முறைக் கட்டணங்கள்

Free Study Packs

ICM ENGLAND Recognised Certification

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, Tel : 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587 |


## 47/5204 (அசோக் லேலண்ட்) பாரஊர்தி ஏலவிற்பனை - 18.01.2006

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 47/5204 இலக்க பாரஊர்தி 18.01.2006 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு, எமது சங்கத் தலைமைக்காரியாலய முன்றலில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

பாரஊர்தியினை 06.01.2006 ஆம் திகதியிலிருந்து கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள எமது சங்கக் காரியாலயத்தில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

01. மீளளிப்பு முற்பணமாக ரூபா 1000/= வும், மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 250 /= வையும் செலுத்தியே கேள்வியில் பங்கு பற்றலாம்.

02. தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையில் 25% தினை உடன் செலுத்துவதுடன், மிகுதிப்பணத்தை மூன்று நாட்களுக்குள் செலுத்தி பாரஊர்தியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ப.தெ.வ.அ.கூ. சங்கம்
ஏ - 9 வீதி, கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.

திரு.ப.இராமச்சந்திரன்
தலைவர்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்
கிளிநொச்சி.

(சி/4434)

# உயர்மட்ட அரசாங்க குழு கிளிநொச்சி செல்கிறது?

## கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு—

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான உயர்மட்ட அரச தூதுக்குழுவொன்று கிளிநொச்சிக்கு விஜயம்செய்து பேச்சுக்களை நடத்தவிருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும் என்ற அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிலரது அழுத்தத்தையடுத்து - மகிந்த ராஜபக்ஷ இந்த முடிவை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இலங்கைக்கான நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வருவது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலும், அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக தனது சிறப்புத் தூதுவரை எரிக்சொல்ஹெய்ம் நியமிக்க முடிவுசெய்துள்ள நிலையிலும், மகிந்த ராஜபக்ஷ இத்தகைய முடிவை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால், விடுதலைப்புலிகள் அரச குழுவின் கிளிநொச்சிப் பயணம் குறித்த தகவலை உறுதிப்படுத்தவில்லை.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர்: -

இது போன்ற உயர் நிலைக் குழுவினரைச் சந்திப்பதற்கான உத்தியோகபூர்வவேண்டுகோள் தமக்கு அனுப்பிவைக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

# ஏப்ரல் 15 ஆம் திகதியில் உள்ளூராட்சி சபை கலைப்பு

கொழும்பு—

அனைத்து உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுட்காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி முடிவடையவுள்ள நிலையில், ஏப்ரல் 15 ஆம் திகதிக்குப் பின்னர் அனைத்து உள்ளூராட்சிச் சபைகளையும் கலைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக உள்ளூராட்சி மாகாண சபைகளின் அமைச்சின் செயலாளர் - தேர்தல் ஆணையாளருக்கு நேற்று முன்தினம் கடிதம்மூலம் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்தும் திகதி குறித்து தேர்தல் ஆணையாளர்தான் தீர்மானிக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தத் தேர்தல் - விகிதாசார முறையின் அடிப்படையிலேயே நடத்தப்படும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# சிங்கள மக்கள் திருமலையிலிருந்து அச்சத்தால் இடம்பெயர்கின்றனராம்!

## சிங்களப் பத்திரிகை கூறுகிறது

திருகோணமலை—

விடுதலைப்புலிகள் தம்மீது தாக்குதலை நடத்தலாமென்ற அச்சம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களிலும் குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்கள் தமது வீடுகளை கைவிட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லத் தொடங்கியுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கணேசபுரம், லிங்கநகர் ஆகிய பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்வதனால் இவற்றுக்கு அருகிலுள்ள சிங்களக் கிராமங்களிலும் பாதுகாப்பற்ற சூழல் நிலவிவருகின்றது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து சிங்களப் பகுதிகளுக்கு விடுதலைப் புலிகள் தங்குதடையின்றிச் செல்லக்கூடிய சூழ்நிலை உருவானதாலேயே இந்தப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் - எனவே, சிங்களக் குடியிருப்பாளர்களுக்கு தன்னியக்கத் துப்பாக்கிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (தே)

# ஜே.வி.பியின் தீர்மானத்துக்கு பிரதி அமைச்சர் கடும் எதிர்ப்பு!

கொழும்பு—

பிரதி அமைச்சர் டிலான் பெரேராவுக்கும், ஜே.வி.பிக்குமிடையே பகிரங்க மோதல் ஏற்பட்டுள்ளது.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு கிளிநொச்சியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான எம். சச்சிதானந்தம் இறுதி வணக்கம் செலுத்தினார். நாடாளுமன்றக் குழுக்களின் துணைத் தலைவரான சச்சிதானந்தம் கிளிநொச்சிக்குச் சென்றது அரசியல் யாப்பு மீறல் என்று ஜே.வி.பி. குற்றம் சாட்டிவருகிறது.

மேலும் சச்சிதானந்தத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்போவதாகவும் அறிவித்தது.

ஜே.வி.பியின் இந்த முடிவை நிராகரித்துப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா கடுமையாக எதிர்த்துள்ளார். சச்சிதானந்தத்துக்கு எதிராக ஜே.வி.பி. கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக தாம் வாக்களிக்கப் போவதாக அவர் கூறியுள்ளார்.

ஜே.வி.பியின் இந்தச் செயற்பாடு ஜனநாயகத்தன்மையற்றது, நியாயமற்றது. சக நாடாளுமன்ற உறுப்பினரின் இறுதிவணக்க நிகழ்வில் சச்சிதானந்தம் பங்கேற்றது குற்றம் அல்ல என அவர் தெரிவித்தார்.

# திருமலையில் ஐந்து மாணவர்களும் துப்பாக்கிச் சூட்டில்தான் படுகொலை!

## மருத்துவ அறிக்கையில் உறுதி

திருகோணமலை—

திருகோணமலை மாணவர்கள் 5 பேரும் துப்பாக்கிச் சூட்டினால்தான் படுகொலைசெய்யப் பட்டதாக - திருகோணமலை நீதித்துறை மருத்துவ அதிகாரி காமினி குணதுங்க தெரிவித்தார்.

5 தமிழ் மாணவர்களின் உடல்களை திருகோணமலை பொது மருத்துவமனையில் பிரதேச பரிசோதனை செய்த மருத்துவர் காமினி குணதுங்க - திருகோணமலை நீதிமன்றில் இந்த அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

சம்பவ இடத்தை திருகோணமலை நீதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார். படுகொலை செய்யப்பட்ட தமிழ் மாணவர்களின் உடல்களில் துப்பாக்கிக் குண்டுகள் துளைக்கப்பட்டிருப்பதையும் அவர் நேரில் கண்டார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், 5 தமிழ் மாணவர்களும் துப்பாக்கியால் சுடப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டெடுத்துள்ளனர். இதையடுத்து, இது தொடர்பில் இராணுவத்தினருடன் கண்காணிப்புக்குழு ஆலோசனை நடத்தியது.

இதனிடையே விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் இதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

திருகோணமலையில் இராணுவம் பதற்றத்தை உருவாக்கவும், தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுவருவதாகவும் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பச்சைநிற ஓட்டோவில் வந்த இராணுவத்தினர் 2 கிரனேட்டுக்களை மாணவர்கள்மீது வீசியுள்ளனர். கடற்கரைக்கு அருகாமையிலுள்ள இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களே இவர்கள்.

இந்தக் கைக்குண்டு வீசப்பட்ட பின்னர் மற்றொரு இராணுவக் குழுவினர் சம்பவ இடத்துக்கு வந்து மாணவர்களைத் தாக்கிக் காயப்படுத்தி ஒவ்வொருவரையும் தனித்தனியாக்கிக் காதுப் பகுதியில் சுட்டுக்கொன்றுள்ளதாக எழிலன் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

# அதிரடிப்படை அதிகாரியைக் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டமாம்!

நுவரெலியா—

நுவரெலியாவில் புலனாய்வுப் பிரிவு அதிகாரியின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து - நுவரெலியாவில் இருக்கும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளைப் படுகொலை செய்வதற்கான திட்டங்கள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக வாழச்சேனை-கரடியனாறு விடுதலைப் புலிகளின் முகாமிலிருந்து புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த இருவர் நுவரெலியாவுக்கு வரவுள்ளனராம்.

நுவரெலியா விசேட நடவடிக்கைப் பொறுப்பதிகாரியைப் படுகொலை செய்வதற்காக இதற்கு முன்னர் எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் - துப்பாக்கிச்சூடு செய்தோ, அவர் பயணிக்கும் வழியில் கிளைமோர் குண்டுகளை வைத்தோ அவரைக் கொல்லத் திட்டமிடப்பட்டுள்ளதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கூறியுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத பட்டியலை ஏற்றுக்கொள்ளமுடியாது; நோர்வே அறிவிப்பு!

ஒஸ்லோ—

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது என நோர்வே தெரிவித்துள்ளது.

நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜொனாஸ் கார்ஸ்ரோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளுக்கு தாம் கட்டுப்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம்- அண்மையில் வரவேற்புத் தடையை விதித்துள்ள இந்த நிலையிலேயே நோர்வேயின் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத நாடுகளின் அமைப்புகளின் பட்டியல் ஒன்று இல்லை என்றபோதும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் மையத்தின்கீழ் சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 54 அமைப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தடை செய்யப்படவில்லை.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என நோர்வே தமது நிலைப்பாட்டுக்கு காரணம் கூறியுள்ளது.

அத்துடன் தமது நாடு ஐரேப்பிய ஒன்றியத்தின் அங்கம் இல்லாமையால், தம்மை ஐரேப்பிய பயங்கரவாத பட்டியலை ஏற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கமுடியாது என ஜொனாஸ் காஸ்ரோர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் இந்தியாவின் தலையீடு இருக்காது என்பது முன்னரே தெரியும்

## ராஜித சேனாரட்ண கூறுகிறார்

கொழும்பு—

இலங்கையில் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் தலையீடு இருக்காது என்பது முன்னரே தமக்குத் தெரியும் என ஐக்கிய தேசியக் கட்சிகூறியுள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண கருத்துத் தெரிவிக்கையில்: -

சமாதானத்தை ஏற்படுத்தல் மற்றும் பொருளாதார ரீதியில் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அரசாங்கத்திடம் எவ்விதமான வேலைத்திட்டமும் இல்லை என்பது இப்போது தெரியவந்துள்ளது.

தேர்தலின்போது அரச சொத்துக்களை முறையற்ற வகையில் கையாண்டுள்ளது என ட்ரான்பேரன்ஸி இன்ரநஷனல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சொத்துக்களை முறையற்ற வகையில் கையாளப்படுவது குறித்து பெரிதாக கதைக்கும் ஜே.வி.பியும் - ஆட்சியில் இருக்கும் அரசுமே இவற்றை முறையற்ற வகையில் கையாண்டுள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்யாது என்பதை ஐ.தே.க அன்றிலிருந்தே அறிந்து வைத்துள்ளது. அது மகிந்தவின் இந்தியப் பயணத்தின்போது தெளிவாகியுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாகத் தொடங்குமாறும், நோர்வே அனுசரணையை ஏற்றுக்கொள்ளுமாறும் இந்தியா வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலை சம்பவத்தால் சமாதானம் சீர்குலைய அனுமதிக்கக்கூடாது!

## முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு

திருகோணமலை—

நாட்டின் சமாதான முன்னகர்வுகளை மேற்கொள்ள அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

திருமலை சம்பவமானது சமாதான நடவடிக்கைகளை சீர்குலைக்க அனுமதிக்கக்கூடாது என கூட்டமைப்பின் தலைவர் ஹாபிஸ் நசீர் அகமட் அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

திருகோணமலையில் நடைபெறும் அசம்பாவிதங்களே கடந்த காலங்களில் யுத்தங்களை தோற்றுவித்தன. இந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையை அரசாங்கம் அவதானமாக ஆராய்ந்து யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க முன்வரவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

# பொலிஸார்மீது தாக்குதல்!

கொழும்பு—

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவரைக் கைதுசெய்யச்சென்ற பொலிஸார்மீது பொறளைப் பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இருவரையும் கைதுசெய்து அழைத்துவரும்போது சுமார் 150 பேரளவில் பொலிஸாரை நோக்கிக் கற்களாலும், பொல்லுகளாலும் தாக்கி அந்த இருவரையும் மீட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண் பொலிஸார் உட்பட மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டதனால் தென்னாபிரிக்காவின் வெற்றி நழுவியது






சிட்னி

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சிட்னியில் இடம்பெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று மழை பெய்ததால் தென்னாபிரிக்க அணியின் வெற்றி வாய்ப்பு நழுவிப்போனது.

நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை இழந்து 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் மழை காரணமாக ஆட்டம் தாமதாகவே ஆரம்பித்தது. இதன் பின் ஆட்டம் ஆரம்பமான வேளை சிமித்துடன் கிப்ஸ் இணைந்துகொண்டார். எனினும் அணி மேலதிகமாக 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 9 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிமித் மக்ராவின் பந்தில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



இதனையடுத்து கலிஸ் இணைந்து கொண்டார். மறுமுனையில் நின்ற கிப்ஸ் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த வேளை அணி 92 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 74 பந்துகளில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவர் ரன் அவுட்டானார்.

இதன்பின் பிரின்ஸ் இணைந்து கொண்டார். எனினும் மீளவும் மழை குறுக்கிடவே ஆட்டம் நிறைவடைந்தது. நேற்றைய தினம் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கலிஸ் 14, பிரின்ஸ் 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மக்ரா மற்றும் லீ இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு அக்தர் சவாலாக இருப்பார்!

## இன்சமாம் உல்ஹக் கூறுகிறார்



லாகூர்

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்யும் இந்திய அணிக்கு வேகப்பந்து வீச்சாளர் அக்தர் மிகப்பெரிய சவாலாக இருப்பார் என பாகிஸ்தான் அணி கப்டன் இன்சமாம் உல் ஹக் தெரிவித்தார்.

இந்தியா 3 டெஸ்ட் மற்றும், 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தானுக்கு நேற்று மாலை புறப்பட்டுச் சென்றது. இரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி லாகூரில் தொடங்கவுள்ளது.

இந்த நிலையில் வேகப்பந்து வீச்சாளர் அக்தர் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு மிகப்பெரிய சவாலாக விளங்குவார் என கப்டன் இன்சமாம் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள்தான் எங்களுடைய இலக்கு. அவர்களைத் தொடக்கத்திலேயே ஆட்டமிழக்கச்செய்ய வியூகங்கள் அமைத்து வருகிறோம். சமீபகாலமாக அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் மோசமாக உள்ளது.

ஆனால், அவர்கள் படைத்துள்ள சாதனைகளை மறுக்கமுடியாது. கடந்த முறை இந்திய அணி இங்கு வந்தபோது வேகப்பந்து வீச்சில் எங்கள் அணி பலமாக இல்லை. ஆனால் இந்தமுறை சிறப்பாக உள்ளது. குறிப்பாக அக்தர் நல்ல நிலையில் உள்ளார். அவர் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் சவாலாக இருப்பார். இந்தத் தொடர் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கும், பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களுக்கும் இடையேயானதாகும் என அவர் கூறினார்.

# இன்றைய போட்டியில் அஸ்ரில் ஆடமாட்டார்




நேப்பியர்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான அஸ்ரில் இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் ஒருநாள் போட்டித் தொடரின் - கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்ற 2 ஆவது ஆட்டத்தில்90 ஓட்டங்கள் குவித்தார். அவரது ஆட்டம் நியூஸிலாந்து அணி வெற்றிபெறக் காரணமாக இருந்தது.

இந்த நிலையில் இலங்கைக்கு எதிராக 3 ஆவது போட்டி இன்று நேப்பியரில் நடைபெறுகிறது. இந்தப் போட்டிக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அஸ்ரில் நீக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக அந்நாட்டு கிரிக்கெட் சபை கூறுகையில் - இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் அஸ்ரில் நீக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர் மீண்டும் அணிக்குத் திரும்புவார் எனக் கூறியுள்ளார்.

# கங்கூலி அணியில் இடம்பிடித்தது ராவிட்டுக்கு மகிழ்ச்சியாம்





பெங்களூர்

கங்கூலி மீண்டும் அணியில் இடம்பெற்றது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் ராவிட் தெரிவித்தார்.

இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்கூலி இலங்கை மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் போட்டித்தொடரிலிருந்து நீக்கப்பட்டார். தற்போது பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தொடரின் வெற்றி வாய்ப்பு குறித்து கப்டன் ராவிட் கூறுகையில் - கங்கூலி அணியில் இடம்பெற்றுள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. அவர் ஒரு சிறந்த வீரர். இந்தத் தொடரின் வெற்றி வாய்ப்புகள் இரு அணிக்கும் சமமாகவே உள்ளன. யார் வெற்றிபெறுவார்கள் என்பதைக் கணிக்கமுடியாது. பாகிஸ்தான் இங்கிலாந்தை வீழ்த்தி தன்னம்பிக்கையுடன் உள்ளது. அது போல் இந்தியாவும் இலங்கை அணிக்கெதிரான தொடரை வென்றுள்ளது. வரும் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் அணி வெற்றிபெறும் என அவர் தெரிவித்தார்.

## விளையாட்டு

# இந்திய பாகிஸ்தான் அணிகளின் போட்டி அட்டவணையில் மாற்றம்!

கராச்சி

ராவிட் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் போட்டி லாகூரில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடங்குகின்றது. 2 ஆவது டெஸ்ட் பைசலாபாத்திலும், 3 ஆவது டெஸ்ட் கராச்சியிலும் நடைபெறுகிறது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஒரு நாள் போட்டித்தொடரின் முதல் ஆட்டம் பெப்ரவரி 8 ஆம் திகதி ராவல்பிண்டியில் நடைபெறுவதாக போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.

அதற்கு அடுத்த நாளில் மொகரம் பண்டிகை. இதனால் பாதுகாப்பு வழங்குவதில் பிரச்சினை ஏற்படும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருதி, போட்டி அட்டவணையில் சிறிது மாற்றம் செய்ய விரும்பியது.

முதல் ஒரு நாள் போட்டியை இரண்டு தினங்களுக்கு முன்னதாக நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன் படி புதிய அட்டவணையை தயார் செய்து அதனை இந்திய கிரிக்கெட் சபையின் ஒப்புதலுக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை அனுப்பி வைத்தது.

இதை இந்திய கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டது. புதிய அட்டவணைப் படி இந்திய அணி நேற்று பாகிஸ்தான் சென்றது. அங்கு நாளை 3 நாள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. அதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

**புதிய அட்டவணை**

ஜனவரி 7 ஆம் திகதி பயிற்சி ஆட்டம் - லாகூர்

ஜனவரி 13-17 வரை முதல் டெஸ்ட் - லாகூர்

ஜனவரி 21-25 வரை 2 ஆவது டெஸ்ட் - பைசலாபாத்

ஜனவரி 29 - பெப்ரவரி 2 வரை 3 வது டெஸ்ட் - கராச்சி

பெப்ரவரி 6 ஆம் திகதி - முதல் ஒருநாள் போட்டி - பெஷாவர்

பெப்ரவரி 11 ஆம் திகதி - 2 ஆவது ஒருநாள் போட்டி - ராவல்பிண்டி

பெப்ரவரி 13 ஆம் திகதி - 3 ஆவது ஒரு நாள் போட்டி - லாகூர்

பெப்ரவரி 16 ஆம் திகதி - 4 ஆவது ஒருநாள் போட்டி - முல்தான்

5 ஆவது ஒருநாள் போட்டி - கராச்சி

# இலங்கையைத் தோற்கடித்து இந்திய அணி சம்பியனானது!



கராச்சி

ஆசிய கிண்ண பெண்கள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் மோதிய ஆசிய கிண்ண பெண்கள் கிரிக்கெட் தொடர் கராச்சியில் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப்போட்டியில் இந்திய - இலங்கை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தது.

சர்மா, கப்டன் மிதாலி ராஜ் ஜோடி பிரமாதமான தொடக்கம் தந்தது. இவர்கள் முதல் விக்கெட்டுக்கு 94 ஓட்டங்கள் சேர்த்தநிலையில் சர்மா 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அஞ்சும் சோப்ரா (42) நின்று பிடிக்க மிதாலி ராஜ் சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம் இந்திய அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களைக் குவித்தது.

மிதாலி ராஜ் 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். 270 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய இலங்கை வீராங்கனைகள், பல்ஷிகாரின் பந்துவீச்சில் தடுமாறினர்.

குமாரிஹமி (58), ஸ்ரீவர்த்தன (55) தவிர மற்ற வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 172 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற இந்திய அணி இந்தத் தொடரில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வென்று சாதித்தது.

# கில்கிறிஸ்ட், மக்ரா, லீ நீக்கம்!

சிட்னி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலியாவின் முன்னணி வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்ரேலிய அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் தொடங்கவுள்ளது.

இதற்கு முன்பாக ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய - தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன. இப்போட்டிக்கான அவஸ்ரேலிய அணியிலிருந்து பிரட் லீ, கில்கிறிஸ்ட், மக்ரா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

பிரட் ஹாடின் விக்கெட் காப்பாளராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். பொண்டிங் தொடர்ந்தும் கப்டனாக நீடிப்பார். ருவென்ரி - 20 போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# வலி. வடக்கு, நல்லூர் அணிகள் இணைக் கேடயத்தை பெற்றன!



அண்மையில் நடைபெற்ற 2005 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபையினர் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு தெரிவாகிய வலிகாமம் வடக்கு பிரதேச சபை அணியின் வீரர்களுடனும் நல்லூர் பிரதேசசபை அணியின் வீரர்களுடனும் மேற்படி பிரதேச சபைகளின் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

இந்தப் போட்டியில் இரு அணிகளும் சகல விக்கெட்டுகளையும் இழந்து 60 ஓட்டங்கள் என்ற சமநிலை பெற்றமையால் இணைக் கேடயம் வழங்கப் பட்டது. (63)

# மத்தியசந்தை அமைக்க உதவுமாறு பொது ஸ்தாபனங்களிடம் கோரிக்கை!

மானிப்பாய்—

வலி.தென்மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானிப்பாய் பிரதேசத்தில் 6 கோடியே 50லட்சம் ரூபா செலவில் இருமாடிகளைக் கொண்ட மத்திய சந்தை, கலாசார மண்டபம், பிரதேச சபைக்கான தலைமைச் செயலகம் என்பன அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியுதவியை வழங்குமாறு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சாந்தசீலன் - நீர்ப், நியாப், நிகொட் ஆகிய பொது ஸ்தாபனங்களின் திட்டப் பணிப்பாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மானிப்பாய் மத்திய சந்தை 1969 ஆம் ஆண்டு கட்டப்பட்ட சிறிய கட்டடத்தில் பல வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வருகிறது. 28 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய இந்தச் சபையில் மக்களின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு சந்தை அமைக்காததால் சபைக்கு போதிய வருவாய் கிடைப்பதில்லை.

மக்களினதும், வியாபாரிகளினதும் வசதிகளுக்கு ஏற்றவாறு இரு மாடிகளைக் கொண்ட நவீன சந்தையை அமைப்பதற்கு இரண்டு கோடியே 50 லட்சம் ரூபா தேவைப்படுவதால், இந்த நிதியைத் தந்துதவுமாறு பிரதேச சபை செயலாளர் - நிகொட் ஸ்தாபனத்தின் திட்டப் பணிப்பாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

# பிடிபட்ட திருடர்களை மக்கள் நையப்புடைத்தனர்

சங்கானை—


சங்கானைப் பகுதியில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்கள் - சங்கானை அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த இளைஞர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது -

இந்தத் திருடர்கள் யாழ்ப்பாணம், சங்கானை, சுன்னாகம் போன்ற பகுதிகளில் 6 இற்கும் மேற்பட்ட சைக்கிள்களையும், ''பல்சர்'' மோட்டார் சைக்கிளையும் திருடியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவர்களுடன் தொடர்புடைய ஏனைய இருவர் வன்னிப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாகவும், மேலும் ஒருவர் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரியவருகிறது.

மேற்படி இளைஞர்கள் இருவரையும் பொதுமக்கள் நையப்புடைத்ததுடன், இனிமேல் இது போன்ற நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டபின் விடுவித்துள்ளனர். (47)

# தேசிய கராத்தே சுற்றுப்போட்டிக்கு பதக்கம் வென்ற யாழ்.வீரர்கள்!



கொழும்பு—

ஜப்பான் இத்தோசுக்காய் கராத்தே கழகத்தின் வருடாந்த தேசிய கராத்தே சுற்றுப் போட்டியின் 15 ஆவது ஆண்டு நிகழ்வு- கொழும்பு மருதானை சென். ஜோசப் கல்லூரியில் நேற்றுமுன்தினம் சென்சே ஆர்.ஜே. அலெக்ஸ் சாண்டர் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் போட்டிக்கு இலங்கையின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் வீரர்கள் பங்குபற்றினர். இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து பங்கு பற்றிய வீரர்கள் ஒரு தங்கப் பதக்கம் உட்பட 16 பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

பதக்கம் பெற்ற வீரர்கள் விபரம்.

செம்பாய்.M.நிமலதாஸ்- வெள்ளி, வெண்கலம்.

செம்பாய்.N.மனோகரன்- வெள்ளி, வெண்கலம்.

செம்பாய்.P.ஜெயந்தன்- வெள்ளி, வெண்கலம்.,

T.ராஜ்குமார் - தங்கம்

J.சயூரதன் - 2 வெண்கலம்

பிரதீபன் - வெள்ளி

பார்த்தீபன் - வெண்கலம்

R.பாஸ்கரன் - வெள்ளி

சிவரூபன்- வெள்ளி, வெண்கலம். கிருபாகரன் -வெள்ளி, வெண்கலம். (47)

# விரிவுரைகள் பகிஷ்கரிப்பை முழுமையான பகிஷ்கரிப்பாக மாற்றும் நிலை ஏற்படலாம்!

## பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றம் அறிக்கை

யாழ்ப்பாணம்—

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற கிளைமோர் தாக்குதலின் போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பலாலி ஆசிரிய கலாசாலையின் நீரியல் உயிர்வளத்துறை ஆசிரிய மாணவன் - பாக்கியநாதன் கமலக்கண்ணன் இன்றுவரை தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் அறிவித்திருந்தபோதிலும் ஆஜர் படுத்தவில்லை.

இராணுவத்தினரினதும், பொலிஸாரினதும் அசமந்தப்போக்கு எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகவே நாம் கருதுகின்றோம்.

எமது பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், நேற்றுமுன்தினம் முதல் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையும் எமது போராட்டத்துக்கு வலுச்சேர்த்து தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றது. இதன்மூலம் பல தமிழ் கலாசாலையின் கல்விச் செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, உரியவர்கள் மாணவரின் விடுதலை தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை எடுக்க உதவுமாறு ஏனைய அமைப்புக்களிடமும் கோரப்பட்டுவருகின்றது.

இதுபோல் நேற்று முன்தினம் தமிழர் ஆசிரியர் சங்கத்திடமும் ஆதரவு கேட்கப்பட்டுள்ளது. தற்போது விரிவுரைகளை மாத்திரம் பகிஷ்கரிக்கும் நாம் - மாணவன் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டால் முழுமையான பகிஷ்கரிப்பாக மாற்றவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுவோம் எனவும் தெரிவித்தனர். (12)

# நுண்கலைப் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்—

திருமறைக் கலாமன்றத்தில் நுண்கலைப் பாடங்களைப் பயில்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

திருமறைக் கலாமன்ற கவின் கலை பயிலகம் அதன் 40 ஆவது ஆண்டு நிறைவில் கலைத்தூது அழகியற் கல்லூரியாக புத்துருவாக்கம் பெற்றுள்ள நிலையில் சுமார் 15 வரையான பாடங்களுக்கு - இந்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களிடம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வயலின், கிற்றார், ஓர்கன், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, வாய்ப்பாட்டு, நடனம் (பரதம்- கதகளி) சித்திரம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களுடன் கூத்து, கண்டிய நடனம், சினிமாவும் தொழில் நுட்பமும் ஆகிய பாடங்கள் சிறப்புப் பாடங்களாகவும் பயிற்றுவிக்கப்படவுள்ளன.

இந்தப் பாடங்கள் வார இறுதி நாட்களில் சான்றிதழ் கற்கை நெறியாகப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறுமெனவும் தெரியவருகிறது. விண்ணப்பப் படிவங்களை யாழ் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கூரை பிரித்து திருட்டு

கோப்பாய்—

இருபாலை - கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கூரையைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் ஆலய உபகரணங்கள், பணம் என்பவற்றைத் திருடிக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 30 ஆம் திகதி நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

ஆலயக் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஊண்டியலை உடைத்து சுமார் 5000 ரூபா பணத்தையும், நீர் இறைக்கப் பயன்படுத்தப்படும் மோட்டார் ஒன்றையும், ஆலயத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகள் மற்றும் அதனுடனான இலத்திரனியல் சாதனங்கள் என்பவற்றையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட பொருட்கள் சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனத் தெரியவருகிறது.

மேலும் அண்மைக்காலமாக இரவுவேளைகளில் இந்தப் பகுதிகளில் இராணுவத்தினர் நடமாடித் திரிவதனால், தாங்கள் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாமல் போவதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த ஆலயச் சூழலை அண்டிய பகுதிகளில் கால்நடைகள் அடிக்கடி களவு போவதாக இந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இருபாலையில் அதிகளவு களவுகள் இடம்பெற்றுவந்தபோதிலும், அண்மையில் திருட்டுக் கோஷ்டி ஒன்று பிடிபட்டதைத் தொடர்ந்து களவு குறைந்திருந்தது என்றும், மீண்டும் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## திருவாசக முற்றோதலும் விசேட பூசைகளும்

சங்கானை—

சங்கானை அருள்மிகு நிகரை ஞானவைரவர் ஆலயத்தில் நாளை மறுதினம் திருவாசக முற்றோதல் அகில இலங்கை சமாதான நீதிவான் த.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேட பூசைகள் இடம்பெறும். அனைவரும் கலந்து இந்த திருவாசகமுற்றோதலைச் சிறப்பிக்குமாறு பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (47)

# வைகுண்ட ஏகாதசி மஹோற்சவ விழா

பொன்னாலை—

பொன்னாலை திருவருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வைகுண்ட ஏகாதசி திவ்விய மஹோற்சவம் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகியது. இது தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வைகுண்ட ஏகாதசி தினமாகும். அன்று முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், அதனைத் தொடர்ந்து 11 மணிக்கு இரதோற்சவமும், இரவு வைகுண்ட ஏகாதசி புராண படனமும் பஜனையும் நிகழும். மறுநாள் 9 மணிக்கு திருவடி நிலைக் கடலுக்குச்சென்று தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

அடியார்கள் திருவிழாக்களில் கலந்துகொண்டு இஷ்டசித்திகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (47)

## நளவெண்பா நூல் வெளியீடு

தெல்லிப்பளை—

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்த நாள் அறநிதியத்தால் வெளியிடப்பட்டுள்ள புகழேந்திப் புலவரின் நளவெண்பா நூலின் வெளியீட்டு விழா - நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஸ்நபன அபிஷேகம், விசேட பூஜை ஆகியவற்றுடன் நூல் வெளியீட்டையடுத்து மதிய போசனமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நூலை விழாவில் ரூ.200 இற்கு பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி லயன்ஸ் கழகத்தினுள் இராணுவத்தினர் முகாம் அமைப்பு!

பருத்தித்துறை—

நெல்லியடியில் அமைந்துள்ள வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அலுவலகத்தினுள் அத்துமீறி உள்நுழைந்த இராணுவத்தினர், அலுவலகத்தின் வளவிற்குள் காவலரண்களை அமைத்து பாதுகாப்பில் ஈடுபட்டுவருவதோடு, அலுவலக வளாகத்தைத் தமது தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்

அண்மைக் காலமாக வடமராட்சிப் பிரதேசத்தில் புதிய புதிய காவலரண்களை அமைத்துவரும் இராணுவத்தினர், இதுபோன்றே வடமாராட்சி லயன்ஸ் கழகத்தின் அலுவலகத்தையும் தமது மினிமுகாம் அமைப்பதற்குப் பயன்படுத்திவருகின்றனர்.

இந்த அலுவலகத்திற்கு அருகில் மினிமுகாம் ஒன்று அமைந்துள்ளது. லயன்ஸ் கழகத்தின் அலுவலகத்தையும் அதனுடன் இணைத்து முகாம் அமைப்பதற்கு இராணுவத்தினர் முயன்று வருகின்றனர்.

இவ்வாறு லயன்ஸ்கழகத்தின் அலுவலகத்தை இராணுவத்தினர் பயன்படுத்தி வருவதால்- லயன்ஸ்கழகத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (14)

## ஹலோ ட்ரஸ்டின் பணிகள் மீளவும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகழ்வுப் பணியை மேற்கொண்டுவரும் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் கடந்த வாரம் இடைநிறுத்தி வைக்கப்பட்ட தனது செயற்பாட்டை மீண்டும் இம்மாதம் 9 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

ஆகையால் இந்த நிறுவனத்தில் பணிபுரியும் சகல ஊழியர்களும் அன்றையதினம் காலை 9மணிக்கு நடைபெறும் அணிவகுப்பிற்கு சமூகமளிக்குமாறு ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

## சைவநெறித் தேர்வுப் பரீட்சை

மானிப்பாய்—

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் - மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறவுள்ளது.

தரம் 3 முதல் 11 வரையான மாணவர்களுக்கான சைவ நெறித் தேர்வு நாளைமறுதினம் காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் நவோதயா பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக அறநெறிப் பாடசாலை அதிபர் சமூகசோதி கா.கணேசதாசன் தெரிவித்தார்.

பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (91)



## சிநேகிதியே

பகுதி II

# பெண்கள் மீதான வன்முறையை எதிர்கொள்வதும் எதிர்ப்பதுவும்



**வன்முறைகளின் வடிவங்கள்.**

பெண்கள் மீதான வன்முறை இன்றைய சமூகத்தில் பற்பல வடிவங்களில் வெளிப்படுகின்றன. தொழிற்சாலைகளில், அலுவலகங்களில், மருத்துவமனைகளில், உற்பத்தி நிறுவனங்களில் - இங்கெல்லாம் உள்ள முதலாளிகள், நிர்வாகிகள், கண்காணிப்பாளர்கள், ஒப்பந்தக்காரரர்கள் , அரசியல் வாதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசியல் அதிகாரமுள்ள நபர்கள், மதத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் போன்றவர்களால் பல இடங்களில் ஏற்படுகின்றது. அரசு இயந்திரங்கள், சட்ட ஒழுங்கு பாதுகாவலர்கள் எனக் குறிப்பிடப்படும் காவல் துறை மற்றும் நீதித்துறை மற்றும் செய்தி ஊடகங்கள்.....

**சமூக வன்முறைகள்**

கருக்குழந்தை கொலையில் தொடங்கி பெண் குழந்தைகள் சமூக நிர்பந்தங்கள் காரணமாக குழந்தைத் திருமணம்,சித்ரவதை, பேயோட்டுதல், நிர்வாணமாகப் என பிறப்பு முதல் இறப்பு வரை சமூகம் பெண்களுக்கு இழைக்கும் கொடுமைகள் எண்ணற்றவை. காதலை அங்கீகரிக்காததால் அமிலம் வீசுதல், கத்திக் குத்து, தீவைப்பு என பல்வேறு வடிவங்களில்வன்முறைபெண்கள் மீது ஏவப்படுகின்றன. பல லட்சம் பெண்கள் குடும்பத்திலுள்ள ஆண்களின் குடிப் பழக்கத்தால் அவ தியுறுகின்றனர். கற்பு பெண்களுக்கு மட் டுமே வலியுறுத்தப்படும். திருமணம் ஆகாதிருப்பது குறித்து அடையும் அவமானம் ஆகியவற்றால் உயிரிழக்கும் பெண்கள் ஏராளம்...

**குடும்ப வன்முறை**

பெரியோர்களால் நிச்சயிக்கப்படும் கட்டாயத் திருமணங்கள், திருமணச் சந்தையில் பெண்கள் கையாளப்படும் முறைகள் இவையே பெண்கள் பலவகையில் வன்முறைக்கு ஆளாகக் காரணமாக இருக்கின்றன. கணவன் தன் மனைவியை அடிப்பதும், விருப்பமில்லாத மனைவியை வன்புணர்ச்சி செய்வதும் சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகின்றன. வரதட்ணைக்காகவோ, பணியாமைக்காகவோ மனைவியைக் கொலை செய்யும் கணவன் கூட உண்டு...

**பாலியல் வன்முறை**

அதிகாரத்தின் கருவியாக எப்போதும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கும் வன்புணர்ச்சி இன்றளவும் பெண்கள் மீது பெருமளவில் பயன்படுத்தும் வன்முறையாகத் தொடர்கிறது. குடும்பத்தினுள்ளும், வெளியிலும், கல்விக்கூடங்களிலும், மத நிறுவனங்களிலும், பிற நிறுவனங்களிலும் - குழந்தைகளையும், பெண்களையும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவது பணியிடங்களில், கல்லூரிகளில், தெருக்களில் பெண்களை மிரட்டுதல், பாலியல் ரீதியாக துன்புறுத்துதல் என நாளுக்கு நாள் பாலியல் வன்முறைகள் அதிகரித்த வண்ணமே உள்ளது...

**வன்முறையை எதிர் கொள்ளல்**

1970 ஆம் ஆண்டுகளில் பெண்கள் இயக்கங்களின் செயல்பாடுகள் காரணமாக பெண்களின் உரிமைகள் மற்றும் ஒடுக்குமுறையின் தன்மைகள் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் பரவலாக ஏற்பட்டது. இதனால் சட்டங்களில் சிற்சில மாற்றங்களையும், ஒருசில நலப்பணிகளையும் மேற்கொள்ளும் நிர்ப்பந்தத்திற்கு அரசுகள் ஆளாகின. பெண்களுக்கு சமஉரிமை வழங்குவது என்பது அரசுக்கோ அதனைத் தாங்கும் ஆளும் வர்க்கங்களுக்கோ இல்லையென்பதால் இவற்றால் மிகச் சில மேற்பூச்சான மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இலட்சக்கணக்கான பெண்கள் நீதி வேண்டி தினந்தோறும் வழக்கு மன்றங்களை வலம் வருகின்றனர்.

**பெண்கள் அதிகாரப்படுத்துதல்**

பெண்கள் பாராளுமன்ற சக்தியின் ஈடுபாடும் உதட்டளவில் மட்டுமே உள்ளது. கட்சியின் பெண்கள் பிரிவை - இவை தேர்தலில் பெண்கள் வாக்குகளைப் பெறுவதற்காகவே பயன்படுத்துகின்றன. பிற்போக்க வாத அரசியல் கட்சிகள் சிறுபான்மை சாதி மதத்தினர் மீது வன்முறையைப் பிரயோகிப்பதற்காகவும் கூட பெண்கள் அணியை திரட்டியுள்ளனர்.

வெளிநாட்டு அரசாங்க நிதியில் செயல்படும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் என்ற பெயரில் நாடு முழுவதும் காளான்களாகக் கிளம்பியுள்ள நிறுவனங்கள் குடும்பத்தினுள் பெண்கள் மீது ஏவப்படும் வன்முறை சம்பந்தப்பட்ட வழக்குகளை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்கின்றன.

ஆனால், இந்தப் பிரச்சினைகளை சமூகத்தின் பிரச்சினைகளாகப் பார்க்காமல், பெண்கள் இயக்கங்களுடனோ, சமூக மாற்றத்துக்கான தேவையுடனோ இணைக்காமல் குறுகிய கண்ணோட்டத் தில் அணுகி, தற்காலிக மாற்றங் களை மட்டுமே இவை ஏற்படுத்துகின்றன. கடந்த 20 ஆண்டுகளில் ஆணாதிக்கத்தைத் தொடர்ச்சியாகவும், தீவிரமாகவும் எதிர்த்து இயங்கும் பெண்கள் இயக்கங்கள் பல தோன்றி வளர் ந்துள்ளன.

இத்தகைய இயக்கங்கள் ஒருங்கிணைந்து தங்கள் கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதன் மூலம் பெண்கள் மீதான வன்முறையை எதிர்க்கும் ஒன்றுபட்ட, உறுதியான செயல்திட்டங்களை உருவாக்குவது சாத்தியமாகும். இது போன்ற இயக்கங்கள் இணைந்து, பிற மக்கள் திரள் இயக்கங்களின் செயல் வீரர்கள், அறிவுஜீவிகள், தொழில் நிபுணர்கள் எனப் பல தரப்பட்ட பெண்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டு பெண்கள் மீதான வன்முறையை எதிர்க்கும் ஜனநாயக அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய கட்டாயமான தேவை இன்று எழுந்துள்ளது.

இவ்வமைப்பு, பெண்களுக்கு எதிரான கொடுமையான வன்முறைகள் நிகழும்போது உண்மை நிலையையறிந்து அதனை வெளிக்கொணரவும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவும், அதிகரித்துவரும் வன்முறைப் போக்கை எதிர்த்து பிரச்சாரம் செய்யவும், குறிப்பான பிரச்சினைகளைப் பரவலாக்க செய்திப் பிரசுரங்களை வெளியிட்டும், பெண்களுக்கு எதிரான கொடுமை குறித்த கட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவும், சாதி, மத அடிப்படையில் உருவாக்கப்படும் வன்முறையை எதிர்த்து மக்கள் திரளாக ஜனநாயக ரீதியில் உறுதியான போராட்டங்களை மேற்கொள்ள முன்வர வேண்டும். ❖

**செம்பருத்தி**

# ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கு...!

நம் முன்னோர்கள் நமக்கு விட்டுப்போன ஒவ்வொரு சடங்குகளுக்கும் ஒருவிஞ்ஞான காரணம் இருக்கிறது...

காலையில் எழுந்தவுடன் குளித்து விட்டே சமையல் உட்பட எந்தக் காரி



யத்தையும் செய்யவேண்டும் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். இது ஏன் தெரியுமா?

அதிகாலையில் எழுந்து குளிப்பதால் - நம்முடைய உடலும், மனமும் சுறுசுறுப்படைந்து நாள் முழுவதும் நம்மை உற்சாகமாக வலம் வரச் செய்யும் என்பதால் தான்... தவிர உடல் சுத்தத்துடன் எந்தக் காரியத்தையும் செய்யும் போது நோயும் நம்மை சுலபமாக அணுகாது.

சிலர்படுக்கையில் இருந்தே குடித்த பிறகு தான் விட்டே எழுந் திருப்பார்கள். இப்படிச் செய்வது மிகத்தவறு. இரவு தூங்கி எழும்போது வாய்க்குள் நிறைய பாக்டீரியாக்கள் பெருகிப் போயிருக்கும். காலையில் எழுந்து பல்துலக்கும் போது அவை அழிந்து விடும். பல்துலக்காமல் தேநீர் அருந்தும் போது அவை அப்படியே வயிற்றுக்குள் சென்று பல



நோய்களை உருவாக்கும் வாய்ப்புள்ளதால் தான், எழுந்தவுடனே பல்துலக்கு என்கிறார்கள்.

முன்பு தினசரி காலையில் சாணத்தைக் கரைத்து வீடு



மெழுகுவார்கள். சாணம் ஒரு இயற்றை கிருமிநாசினி என்பதால், வீட்டுக்குள் நமக்கு கெடுதல் செய்யும் எந்தக் கிருமியும் உள்ளே நுழையாது.

அந்தப் பழக்கத்தில் தான் இப்போதுள்ள நவீன வசதிகள் கொண்டு தினமும் வீட்டைச் சுத்தப்படுத்துகிறோம்.

தினமும் இரவு படுக்கும்முன் சமையலறையை சுத்தமாக மெழுகிக் கோலம் போடுங்கள்



என்று சொல்வார்கள். சுத்தப்படுத்தாமல் வைத்திருக்கும் சமையலறையில் இரவெல்லாம் கரப்பான் பூச்சி மற்றும் எலிகள் சிதறிய உணவுத் துணுக்குகளைச் சாப்பிட்டு, பின் சமையல் அறையையே தன் இருப்பிட மாகப் பாவிக்க ஆரம்பித்து விடும்.



அந்தக் காலத்து வீடுகளில் முன் வாசல், பின் வாசல் என்று இரு வழிகள் இருக்கும். முன் வாசல் வழியாக வெளியே செல்பவர்கள், பின்வாசல் வழியாக தங்கள் காலை நன்றாகக் கழுவி விட்டுத் தான் வீட்டுக்குள்ளேயே நுழைவார்கள். வெளியே சென்று விட்டு வரும் போது நம் காலோடு ஒட்டிக் கொண்டு வரும் கிருமிகளை சுத்தப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் இப்படிச் செய்தார்கள். இந்தக் காலத்து வீடுகளில் ஏது இரண்டு வாசல்? அதனால் வெளியே சென்று விட்டு வருபவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் நேரே சென்று கால்களைக் கழுவி விட்டுப் பிறகு வேறு வேலைகள் பார்க்கலாமே... *(தொடரும்...)*

# குழந்தையின் பற்களைப் பாதுகாப்பது எப்படி?

பல்லில் ஏதாவது பிரச்சினை என்றால் தான் பல் மருத்துவம் பற்றிய ஞாபகம் வருகிறது மக்களுக்கு!

பொதுவாகப் பல்லை ஒரு உறுப்பு மாதிரியே மக்கள் நினைப்பதில்லை. பல் தானே என்ற அலட்சிய மனப்பான்மைதான் இதற்குக் காரணம்.

குழந்தைப் பருவத்தில் அதுவும் பல் விழுந்து முளைக்கும் கால கட்டத்தில் - ஆறு, ஏழு, எட்டு வயதில் பல் விழுந்து புதிதாக முளைக்கும். அப்போது விழுந்த பல்லை விட புதிதாக முளைத்த பல் பெரிதாக இருப்பதால் தப்பி முளைத்த பல்லாக அது ஆகி விடும்.



பல் முளைத்து வெளியில் வரும் வேளையில் மருத்துவரிடம் காட்டி அவை நன்றாக முளைக்கின்றதா என்று பார்ப்பது நல்லது.

முன்பெல்லாம் தெத்திப்பல் இருந்தால், பற்களில் இடைவெளி இருந்தால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலைதான் இருந்தது. இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டதால், எதையும் சரிசெய்யலாம் என்கிற நிலைமை இருப்பினும் சில படித்த உயர்தர வசதி படைத்தவர்களில் சிலர் மட் டும் சீர் செய்கின்றார்கள்.

பற்களில் உள்ள இடை வெளிக்கு காரணம் பரம்பரைத் தன்மையாலும், அளவு பெரிதாக இருப்பதாலும் தான். இந்த இடைவெளியை அடைப்பதற்கு இரண்டு முறைகள் உண்டு. அதற்காக கடினமான பொருட்களை கடிப்பது, சாப்பிடலாம் என்பதில்லை. தெத்திப்பற்களை கிளிப்போட்டு கொஞ்ச நாட்களில் சரிசெய்து விடலாம். சிறுவயதில் அதனைச் செய்து கொள்ள வேண்டும்.

பல்லில் நோய் உள்ளவர்களே அதிகம். இதற்கு மிகமிக முக்கிய காரணம் நம்முடைய உணவுப் பழக்கங்கள்தான். அளவுக்கு அதிகமான அளவில் இனிப்புக்களை சாப்பிடுவது. குழந்தைகளில் பெரும்பாலானவர்கள் சொக்லேட், சீனி, சர்க்கரை ஆகியவற்றை அதிகம் சாப்பிடுகின்றனர். இரவில் பற்களைத் தேய்க்கும் பழக்கம் 90 சதவீதத்தினருக்கு இல்லாதது முக்கிய காரணம். அத்துடன் இரவில் சர்க்கரை கலந்த பால் போன்றவற்றைச் சாப்பிட்டபின் வாய் கொப்பளிக்காமல் படுத்துறங்கும் போது பற்களில் பாக்டீரியாக்கள் தங்கி பற்சூத்தை ஏற்படுகிறது.

பெரும்பாலானவர் பல்லின் சூத்தை என்றால் வலி ஏற்பட்டால்தான் மருத்து வரை நாடுவார்கள். இப்படி வரும் போது பல் சூத்தையின் தீவிரத்தைப் பொறுத்து சிகிச்சை அளிக்க வேண்டி நேரிடும்.

# பிள்ளைகளின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த பெற்றோரின் மனமாற்றம் அவசியம்!

த.சிவபாலு எம்.ஏ

## பகுதி II

மிகக் குறைந்த வருமானத்தை உடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மிகக் கூடியளவு வன்முறை உடை



யவர்களாகக் காணப்படுவதற்குக் குடும்பங்களின் குழப்ப நிலை காரணமாகிறது. தாய்வழி மன அழுத்தத்துக்குக் காரணமாகக் குறைந்தளவு வருமான நிலை காரணமாகிறது. குழந்தைகளின் பயந்த நிலைக்குக் குடும்பத்தின் குழப்பநிலை காரணமாக அமைகிறது எனக் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வின்படி பெற்றோர் பிள்ளைகளோடு ஒட்டி உறவாட வேண்டியதும், கண்டிப்புக்குப் பதிலாக அன்பினால் ஆட்சி செய்ய வேண்டும் என்பதும் எடுத்துக் கூறப்படுவது அவதானிக்கத்தக்கது. பிள்ளைகளின் நன்னடத்தைக்காக, அவர்களின் நல்லொழுக்கத்துக்காகத் தான் நாம் அவர்களைத் தண்டிக்கிறோம் என்று அடிக்கடி கூறும் பெற்றோர்களை நாம் கண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் தண்டனை அளிப்பதால், பிள்ளைகளின் பிஞ்சு உள்ளத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம் அல்லது பாதிப்பு எத்தகையது என்பதனை பலர் உணர்ந்து கொள்வதில்லை. தண்டனை பெற்ற பிள்ளை பெற்றோருக்குத் தான்செய்த தவறுக்குத் தானே பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்வதோ அல்லது அதன் தாக்கத்தை அறிந்து கொள்வதோ இந்தத் தண்டனையின் பாற்படுமா? என்பதனைச் சிறிதேனும் சிந்தித்துப் பார்க்கும் நிலை பெற்றோருக்கு உண்டா? அல்லது சிந்தித்துப் பார்க்கிறார்களா? என்பது கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

பெற்றோரின் நெருக்கமான தொடர்பு, பிள்ளைகளிடம் இன்பகரமான சூழலைத் தோற்றுவிக்கின்றது என்பது உளவியலாளர்களின் முடிவு. கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கையின்படி பதினெட்டு வயதினை எட்டிப் பிடிக்கும் பிள்ளைகளின் மனத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளில் பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு முறைகள், அவர்கள் பிள்ளைகளோடு கொண்டுள்ள தொடர்பு என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆளுமை நிறைந்தவர்களாகப் பிள்ளைகள் வளர்வதற்குப் பெற்றோரின் வளர்ப்புமுறை மிக அவசியமாகும். பிள்ளைகள் உள, உடல் வலுமிக்கவர்களாக வளர்வதற்கு அவர்களுக்கு இயல்பாகவே தேவைப்படும் அடிப்படை உளவியற் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியது இன்றியமையாதது. காப்பு, அன்பு, அரவணைப்பு, மதிப்பு(கணிப்பு) போன்ற அடிப்படைத் தேவைகள் பிள்ளைகளுக்கு மிக அவசியமானவை. இவற்றை அவர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் தங்களை அற்பணித்துச் செயற்பட வேண்டியவர்கள் வேறு யாருமல்லர். அது தாய், தந்தையரே.

குழந்தை ஆரம்பத்தில் தாயின் அணைப்பினிலேயே வளர்கிறது. பெரும்பாலான உயிரினங்களின் தன்மைகளில் தாய்மையின் பங்கு அதிகமானதாகவே அமைகிறது. கருத்தரித்து, பெற்று வளர்ப்பதில் தாயின் பங்கு அதிகம். அது பறவையானாலும் சரி விலங்குகளாக இருப்பினும் சரி தாயின் அணைப்பிலேயே குழந்தைப் பருவம் தங்கியிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக - குரங்கின் பழக்கவழக்கத்தை நாம் எடுத்து நோக்கினால் அங்கு குழந்தைப் பருவத்தில் தாயே தனது குட்டியை கட்டி அணைத்துச் செல்வதைக் காணலாம். இதன்படி மனித வளர்ச்சிப் பருவங்களிலும் இத்தகைய பண்புகளை நாம் காணமுடிகிறது.

மனித வளரச்சிப் பருவத்தில் பதினெட்டு வயதுப் பருவம் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இந்தக் காலத்தில் தாய் - தந்தை இருவரதும் அணைப்பு, நெருக்கம் பிள்ளைகளை நல்வழிப்படுத்த அவசியமானதாகக் காணப்படுகிறது. மன முறிவுற்ற பிள்ளைகளை ஆராய்ந்ததில் தந்தையுடனான நெருக்கமான போக்கு பெண் பிள்ளைகளுக்கு மன முறிவை அல்லது மன அழுத்தத்தைக் குறைப்பதாகக் காணப்படுகிறது என ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

பெற்றோர் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுவதனால் பிள்ளைகள் சாந்தமுடையவர்களாக வளர்கிறார்கள் எனவும், கூடியளவு கண்டிப்பும், தண்டனையும் வழங்கும் பெற்றோரின் பிள்ளைகள் வன்முறையாளர்களாக வளர்கிறார்கள் என்றும் கருத்துக்களை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

நம்பிக்கையும், விசுவாசமும் உடையவர்களாக உங்கள் பிள்ளைகளை வளர்ப்பதால், நடத்தை மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை அவர்களே தவிர்த்துக் கொள்ளும் தன்மையைப் பெறுவார்கள். சிலர் கடவுளை அல்லது வேறொரு உயர்ந்த தொன்றை அல்லது சக்தியை நம்புகிறார்கள். வேறு சிலர் தமது நம்பிக்கையினை நாட்டின் மீது அல்லது வேறு மக்கள், பொருட்கள் அல்லது தம் மீது வைக்கிறார்கள். நம்பிக்கை என்பது நம்புகின்றவை, உங்களுக்காக வேலை செய்பவை. சித்தியடைவோம் என்ற நம்பிக்கை வைத்தால், சித்தியடைவது சுலபம், இல்லை சித்தியடைய மாட்டேன் என்னும் அவநம்பிக்கை கொண்டால் சித்தியடையவே முடியாது. எனவே, இலக்கை எட்ட நம்பிக்கை கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை மிக்கவர்களாக இருக்கும் போது வெற்றி பெறுவது இலகுவானதாகின்றது. தன்னம்பிக்கையும், தனது செயல்களில் விசுவாசமும் கொள்பவனே விடாமுயற்சி உடையவனாகவும் வளர்கின்றான். விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் ஒருவனிடத்தில் குடிகொள்ளும் போது, அது வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும். 'பாரம்பரியமாக நம்பப்பட்டு வந்த மரபு வழிக் கதைகள் மறையும் போது, அதனோடு ஒட்டிய கனவுகளும் மறைந்து போகின்றன. கனவுகள் மறைந்து போகும் போது, அங்கு எந்த மேன்மையும் இருக்காது' என யூட் இந்திய சமூகத்தினர் சொல்வதனையும் அவதானிக்கலாம்.

பிள்ளைகளின் நடத்தையில் மாற்றங்களை ஏற்படுத்த அல்லது நன்னடத்தை (நல்லொழுக்கம்) உடையவர்களாக, நல்ல பண்பாளர்களாக வளர்வதற்குப் பெற்றோரின் - நல்லுறவு, பாசம், அன்பான கலந்துரையாடல், தங்களை அர்ப்பணிக்கும் தன்மை என்பன உதவுவதாகக் கொள்ளப்படுகிறது. இதனால் பிள்ளை வளர்ப்பு முறைகளில் பெற்றோர் தமது போக்கையும், நடத்தையையும், நோக்கத்தையும் மிகுந்த அவதானத்தோடு பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து' என்பது போன்று பிள்ளைகளின் உள்ளமோ மென்மையான மலரிலும் மென்மை வாய்ந்தது. அவர்களின் உள்ளமாகிய மலர் வாட்டமடையாது, என்றும் நறுமணம் வீசி இன்பகரமாக இங்கிதமான சூழலை ஏற்படுத்த அவர்களின் மனத்தில் மாசு படியாதபடி பெற்றோர் நடந்து கொள்ளுதல் இன்றியமையாததே!. ✣

# விட்டுக் கொடுப்பது யார்?

பாலுறவு என்ற அத்திவாரத்தில் கட்டப்பட்டு, காதல் என்னும் சுவர் எழுப்பி, அன்பு, பாசம் என்னும் ஜன்னல்கள், கதவுகள் பொருத்தி, ஒத்துழைப்பு, புரிந்துணர்வு என்னும் கோப்பிசமும், ஓடும் பொருத்தி, விட்டுக் கொடுப்பு என்னும் வர்ணம் பூசி, வாழ்நாள் முழுவதும் வசந்தம் காண்பது தான் இல்லறம்.

ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் நிகழும் திருமணபந்தம் இவ்இனிய இல்லமாம் இல்லறத்தை உருவாக்கித் தருகிறது. எதை நினைத்தால் மனம் பரவசமடையுமோ, எதன் அண்மை மகிழ்வையும், நிம்மதியையும் தருமோ, எங்கே எம் உள்ளம் ஒன்றிப்போய் சரணடையுமோ அது தான் உண்மையான இல்லறத்தின் துணை என்பது.

ஆணுக்கு ஆனந்த வெள்ளத்தைப் பெண்ணும், பெண்ணுக்குப் பேரின்பத்தை ஆணும் நித்தமும் வழங்கும் எல்லோராலும் எப்பொழுதும் முடிகிற காரியமா என்று நீங்கள் கேட்கலாம்.

இது முடியாத காரியம் அல்ல. பிரச்சினைகள் இல்லாத வாழ்க்கை இல்லைத்தான். ஆனால், வாழ்க்கையே பிரச்சினையாக நாம் இடம் தரலாமா? இன்று பல குடும்பங்களில் வீண் பிடிவாதமும், வீம்பும், தன் முனைப்பும் நல்ல உறவுகளைக் கேள்விக்குறியாக்குகின்றன.

திருமண வாழ்க்கையின் வெற்றியே விட்டுக்கொடுப்புத் தான் என்பதைப் பலரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனினும் எதிர்ப்பாலார் விட்டுக் கொடுத்தாலென்ன என்று இருவரும் நினைப்பதுதான் பிரச்சினையின் ஆரம்பம்!

நான் மட்டும் தான் விட்டுக் கொடுக்க வேண்டுமா? அவரும் விட்டுக்கொடுத்தாலென்ன? எனப் பெண் நினைக்கிறாள். இவள் விட்டுக்கொடுத்தாலென்ன குறைந்தாபோய்விடும்? என்று ஆண் நினைக்கிறான்.


ஒரு கை அசைத்தால் ஓசை வராது என்பார்கள். இருகைகளும் இணைகிற போது தான் ஓசை பிறக்கிறது. விட்டுக் கொடுப்பு என்பதும் ஒரு பக்கம் இருந்து மட்டும் வரவேண்டிய விடயமல்ல. இரண்டு பக்கங்களிலிருந்தும் வர வேண்டியதுதான்.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாக சரியோ, பிழையோ எதற்கெடுத்தாலும் பெண்தான் விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி நிற்கிறது.

பாரதிக்குப் பின் வந்த பெண் கல்வியும், பெண்ணியச் சிந்தனைகளும் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்ற எழுச்சியானது, முன்சொன்ன ஆணாதிக்கச் சிந்தனைகளை நிராகரித்து நிற்கின்றன. நியாயமான பக்கமிருந்து, இரு தரப்பிலும் விட்டுக் கொடுப்பு இருக்க வேண்டும் என்று இன்றைய பெண்களில் பலர் சிந்திக்கிறார்கள். ஆண்களில் பலர் இன்னமும் பழைய பண்பாட்டுப் போலிகளில் ஊறியவர்களாக பெண் தான் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று தான் பிடித்த முயலுக்கு மூன்று காலாக நிற்கிறார்கள். இதுவே இன்றைய இல்லற பூகம்பங்களின் பிறப்பிடமாக இருக்கிறது.

குடும்பம் என்ற அமைப்பைப் பொறுத்தவரை மிக அத்தியாவசியமானது அடிப்படை பொருளாதாரமே. பொருளாதாரம் இல்லாவிட்டால் பல குடும்பங்களில் பிரச்சினைகள் உருவாதல் சகஜமே. அதே சமயம் இதே பொருளாதாரம் பெருகியுள்ள குடும்பங்களில் கூட பிரச்சினைகள் அதிகமாக உள்ளதை மறுப்பதற்கில்லை.

திருமண வாழ்வில் விட்டுக் கொடுப்புக்கள் பற்றிப் புரிந்து கொள்வதற்கும், அவற்றைச் செயற்படுத்துவதற்கும் பல குடும்பங்களில் நீண்ட காலம் பிடிக்கிறது. திருமணமான புதிதில் புதுச் செருப்புக் கடிப்பது போல் விட்டுக் கொடுப்பதில் இருவரும் இறுக்கம் காட்டுகிறார்கள்.



காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி இருவரினதும் மன உணர்வுகளும் பரஸ்பரம் புரிந்து கொள்ளப்பட்டால் தான் இலகுவாக விட்டுக்கொடுத்தல் சாத்தியமாகிறது. விட்டுக் கொடுப்புகள் தான் வாழ்க்கையில் கரடு முரடுகளைச் சீர்ப்படுத்தி, வாழ்க்கையை இனிமையாக்குகிறது. வலிகளையும், வேதனைகளையும் இதமாகவும், மென்மையாகவும் மாற்றுகிறது.

எனவே, கணவனும், மனைவியும் மனம் விட்டுப் பேசி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்.

தனது மனைவியின் விருப்பு வெறுப்புகள், அபிலாஷைகள், இலட்சியக் கனவுகள் எவை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வீட்டிலும், அலுவலகத்திலும், வேலைத் தளத்திலும் சந்திக்கின்ற, மனதை நெருடுகின்ற பிரச்சினைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். குறைகளை மனதிலே அமுக்கி வைத்திருக்கவும் கூடாது. அதே வேளையில் ஆவேசமாகக் கொட்டித் தீர்க்கவும் கூடாது. இதமாக எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும்.

புரிதல் மூலமே விட்டுக் கொடுப்பும் மனப்பூர்வமாகச் சாத்தியமாகிறது. விட்டுக்கொடுப்பதில் தானே முந்திக்கொள்ள வேண்டும் என்று எண்ணினால் பிரச்சினைகள் சூரியனைக் கண்ட பனித்துளி போல் விலகி ஓடி விடும். மற்றவர் விட்டுக் கொடுத்தால் என்ன என்ற ஈகோ பார்த்தால் நல்லறமாக பிரகாசிக்க வேண்டிய இல்லறம் ரணமாக வலிக்க ஆரம்பிக்கும். எனவே விட்டுக் கொடுப்போம். ♥

சந்திரகாந்தா முருகானந்தன்.

# பெண்கள் மீதான கொலைகள் தொடருமேயானால் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலை ஏற்படும்

## வட்டக்கச்சி பெண்கள் மேம்பாட்டுப் பேரவை

புங்குடுதீவில் இளையதம்பி தர்சினி என்ற 20 வயது இளம் பெண் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம் என வட்டக்கச்சி பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது-

இந்தக் கொடூரமான கொலையை சர்வதேச சமூகமும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஏன் இதுவரை கண்டிக்கவில்லை. தமிழர் தாயகமெங்கும் அரசினால் குவித்துவைக்கப்பட்டுள்ள முப்படைகளும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இந்த சிங்கள அரசின் இனவாத மேலாதிக்கத்தையும், இன ஒடுக்கு முறையையும் சர்வதேச சமூகமும்- இலங்கை சமாதான நடவடிக்கைக்கான இணைத் தலைமை நாடுகளும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தாயகத்தில் குவிக்கப்பட்டுள்ள மேலதிக முப்படைகளையும் உடனடியாக அகற்ற வேண்டுமென நாம் அரசைக் கோருகின்றோம். இதுவரை காலமும் தமிழீழ மண்ணிலே தொடரும் இராணுவத்தினரின் கோரப் பசிக்கு இப்பெண்ணும் இரையாக்கப்பட்டுள்ளார். ஆகவே, எமது சகோதரி தர்சினியை கடற்படை அரக்கர்களினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட சம்பவமாகக் கடந்த ஆண்டுகளில் இடம் பெற்ற செம்மணியின் கிரிசாந்தி, ரஜனி, சாரதாம்பாள் போன்ற சகோதரிகளை இவர்கள் இப்படியாகவே கொலை செய்ததை ஞாபகப்படுத்தியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்

அடுத்து புலனாய்வுத் துறையினராலும், ஒட்டுக்குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப்பரராஜசிங்கத்தின் படுகொலை எமக்கு மிகவும் அதிர்ச்சி தரும் விடயமாகும். மனித உரிமை தொடர்பான விடயங்களில் கூடிய அக்கறை கொண்ட இவர் தாயகத்திலும் ஒரு மனித உரிமை தொடர்பான ஒரு அமைப்பைக் கட்டியெழுப்பப்பாடுபட்டவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வெளிவிவகாரக் குழுவிலும் உறுப்பினராக அங்கம் வகித்து இராஜதந்திர ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும், மனித உரிமை மீறல்களையும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான நியாயப்பாடுகளையும் சர்வதேச அரங்கில் எடுத்துரைத்தவர் அந்த மாமனிதர். ஆனால், சிங்கள ஆயுதப் படைத்தரப்பு தமிழ் மக்கள் தமது ஆதிக்கம், அதிகாரம் என்பவற்றின் கீழ் அடிபணிந்து நடக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாகப் பேசவோ, போராடவோ தொடங் கியதும் அவர்கள் தமது மிலேச் சத்தனத்தையும், வெறித்தனத் தையும் வெளிப்படுத்தத் தொடங்கி விடுகின்றனர் என்பதே உண்மையாகும். அன்று கிரிசாந்தி, இன்று தர்சினி, இனி யார் கொல்லப்படுவர்? எமது மண்ணிலே போர் நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் எல்லாம் தமிழ் மக்களின் விடுதலையை நேசித்து குரல் கொடுத்த தமிழ்ப் பற்றாளருக்கு எமது அஞ்சலியைச் செலுத்திக் கொள்வதோடு, தொடர்ந்து தமிழ் மக்கள் சிங்களப் படைகளின் உயிர்ப்படு கொலை களில்இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள அணைவரும் ஆயுதம் ஏந்திப் போராடுவோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீரச்சாவு

கிளிநொச்சி

வவுனியா-வலையன்கட்டில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட கிளைமோர்த்தாக்குதலின் போது போராளி ஒருவரும் நாட்டுப்பற்றாளர் ஒருவரும் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அநுராதபுரம் நகரப் பகுதியை நிரந்தர முகவரியாகவும், கங்கானிக் குளம் இரணை இலுப்பைக்குளம் வவுனியாவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட போராளியான மேஜர் ஜெயானந்தன் என்றழைக்கபடும் செல்லத்தம்பி சுரேந்திரன் (சுரேஸ்)

கோவில் குஞ்சுக்குளத்தை நிரந்தர முகவரியாகவும், மடத்துவிளான்குளம் குஞ்சுக்குளத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட நாட்டுப் பற்றாளர் தேவராசா விநோதன் ஆகிய இருவருமே வீரச்சாவடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

# மதுபான நிலையம் தீக்கிரையானது

வட்டக்கச்சி

வட்டக்கச்சி, கட்சன் வீதிச் சந்திக்கருகாமையில் இயங்கி வந்த பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் மதுபான விற்பனை நிலையம் விஷமிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம் பெற்றது. மதுபான நிலையம் எரிந்து கொண் டிருப்பதைக் கண்ட அயலவர்கள் தீயை அணைப்பதற்குள் முன் பகுதி முற்றாக எரிந்துள்ளது.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை வட்டக்கச்சி காவல் துறைப் பணிமனையினர் நடத்தி வருகின்றனர். இந்த விற்பனை நிலையத்திற்கு அருகாமையில் ஆலயம், பாடசாலை என்பன காணப்படுவதால், இதனை அகற்றுமாறு உரியவர்களிடம் அந்தப் பகுதி மக்கள் பல முறை கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (09)

# தேசியத் தலைவர் மீது நம்பிக்கையுள்ளவராகவும் உதவுகரமாகவும் விளங்கியவர் அமரர்.எம்.ஜி.ஆர்

## அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா தெரிவிப்பு

கிளிநொச்சி

விடுதலைப்புலிகள் மீது நம்பிக்கை கொண்டவராகவும், உதவுகரமாகவும் விளங்கியவர் எம்.ஜி.ஆர் என அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் நினைவு தினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தை முடுக்கிவிட்டு இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதன் விளைவுகள் அவருக்கே பாதகத்தை ஏற்படுத்தும். மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் - தமிழீழ மக்கள் மீதும் தேசியத் தலைவர் பிரபாகரனின் மீதும் பற்றுக்கொண்டு விளங்கினார்.

அவர் ஈழ விடுதலைக்காக நிதி உதவிகள் உட்பட எண்ணற்ற உதவிகளைச் செய்தார். புலிகள் மீது நம்பிக்கை கொண்டவராகவும், உதவும் கரமாகவும் விளங்கினார். சிங்கள ஆட்சியாளர்களை அவர் அன்றே புரிந்து கொண்டதாலேயே களத்திற்குச் சென்று ஆயுதம் ஏந்திப் போராடுமாறு வலியுறுத்தினார்.

இவர் சிறந்த நடிகர் மட்டுமல்ல. தலை சிறந்த அரசியல்வாதியாகவும், மனித நேயமுள்ளவராகவும்,உண்மை நேர்மைக்குத் தலை சாய்ப்பவராகவும், தமிழீழ மக்கள் மீது பற்றுறுதி கொண்டவராகவும் விளங்கினார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிரந்தர வைத்தியர்களின்றி மல்லாவி மருத்துவமனை!

மல்லாவி

மல்லாவி மருத்துவமனையில் நிரந்தர வைத்திய அதிகாரி எவரும் இன்றி நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகி ன்றனர். பத்துக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வைத்தியசாலையில் பயன் பெறும் நிலையில் ஒரு வைத்தியருடன் மட்டும் இயங்கி வருகின்றது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சை பெறுவதற்கு கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் மூன்று வைத்தியர்களின் தேவையுள்ளபோதும், தற்போது ஒரு வைத்தியரின் சேவை மட்டுமே வழங்கப்படுகிறது. எனவே, இந்த வைத்தியசாலைக்கு ஒரு வைத்திய அதிகாரியை நியமிக்க சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டுமென கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

# வலுவிழந்தோருக்கான உதவு பொருட்கள்

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வலுவிழந்தோருக்கான உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

தமிழர் சமூக, பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தினால், ஜேர்மன் டெராடெக் நிறுவனத் தின் ஆதரவுடன் 10 மில்லியன் ரூபா பெறுமதியான அன்பளிப்பு பொருட்கள் கையளிக்கப்ப ட்டன.

இக்கையளிப்பு கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இந்த அன்பளிப்பு பொருட் களை கிளிநொச்சி அரசசார்பற்ற இணையத்தலைவர் கணேசபிள்ளை, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம், சீடொட் நிறுவனப்பணிப்பாளர் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இந்த அன்பளிப்புப் பொருட்களில் சக்கர நாற்காலிகள், பிராணவாயு உற்பத்தி கருவி, உடல் வலுவூட்டல் கருவி என்பன அடங்கும்.

# திருமலை மாணவர்கள் படுகொலை; கிளிநொச்சியில் கண்டனப் பேரணி!


கிளிநொச்சி

திருகோணமலையில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று மாபெரும் கண்டனப்பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஆகிய இணைந்து இந்தக் கண்டனப் பேரணியை ஒழுங்கு செய்திருந்தன.

கிளிநொச்சி அரச செயலக வளாகத் திலிருந்து முற்பகல் 11.15 மணியளவில் ஆரம்பமான கண்டனப் பேரணி, பிரதான வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சென்றடைந்தது.

அங்கு கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றதுடன் மகஜரும் கையளிக்கப்பட்டது.




ஜேர்மனியிலுள்ள ரெராரெக் நிறுவனத்தினால் வலுவிழந்தோருக்கான சக்கர நாற்காலிகள் மற்றும் உடல் வலுவூட்டல் கருவிகள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வில் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் உரையாற்றுவதையும், உதவிப்பொருட்கள் வழங்கப்படுவதையும், அன்பளிப்புச் செய்யப்பட்ட உதவிப்பொருட்களையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

*பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்*
*மக்கட் பதடி எனல்*

*- திருக்குறள்*

## நமது நோக்கு

# கோழைச் சொல் அம்பலமேறாது!

திருகோணமலையில் பாதுகாப்புப் படையினரால் ஐந்து அப்பாவி மாணவர்கள் ஒரே இடத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமானது, பௌத்த - சிங்கள பேரினவாத வெறித்தனத்தின் அதியுச்ச வெளிப்பாடாக நிகழ்ந்துள்ளது.

இதுதொடர்பாக தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில்-தமிழ் மக்கள்மீது கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தின் கொடு ரமாகவே இந்தச்சம்பவம் அமைந்துள்ளது எனக் குறிப் பிட்டுள்ளமையானது, சமாதானத்தை வலியுறுத்தும் சகல தரப்பினராலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன் றேயாகும்.

கோழைத்தனமானதும், இழிவானதுமான இந்தச் செயலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள திரு.சம்பந்தன் அவர்கள் - குற்றமிழைத்தவர்களைக் கைதுசெய்து நீதியின்முன் நிறுத்தி தண்டிக்கும்படி ஜனா திபதியையும், அரசையும் கோருவதுதான் அர்த்தமற்ற ஒன்றாகும்.

அரச பயங்கரவாதத்தின் பின்னணியில் இயங்குபவர் கள் அரசும், அரசின் தலைமைப்பீடமும்தான் என்பதை பலதசாப்தகால பட்டறிவின் அடிப்படையில் சம்பந்தன் ஐயா அவர்கள் மிகத்தெளிவாகப் புரிந்து கொண்டும், தமிழினத்துக்கு யார் தொடர்ந்தும் துரோகமிழைத்து வரு கிறார்களோ அதே பேரினவாதத் தலைவர்களிடமும், அரசி டமும் நீதி கோருவதுதான் வேடிக்கையானதும், தேவை யற்றதுமான ஒரு விடயமாக உள்ளது.

இந்த மூன்று தசாப்தகால தமிழர்மீதான ஆயுதரீதி யான ஒடுக்குமுறைக்கு இலங்கையின் ஆட்சிபீடத்தை அலங்கரித்த சகல சிங்களத் தலைவர்கள் அனைவருமே காலத்துக்குக் காலம் தலைமை தாங்கி நெறிப்படுத்தி வந்துள்ளார்கள் என்பதை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறு மிக ஆழமாகவே பதிவு செய்துள்ளது.

ஒவ்வொரு ஆட்சி மாற்றமும் முன்னைய ஆட்சியினரை விடவும் அதிகம் பேரினவாத வெறியுடன் பிரசாரம் செய்த தலைமைகளை சிங்கள தேசம் அங்கீகரித்து, பதவியில் அமர்த்தியதன் மூலமே ஏற்பட்டுள்ளது என்பதை வரலாறு அறிந்தோர் உணர்வர்.

டி.எஸ் சேனநாயக்க முதல் இன்றைய மகிந்த ராஜ பக்ஷ வரை இந்த நிலைமையே தொடர்ந்து வருகிறது.

குறிப்பாக பண்டார நாயக்கவின் அரசாங்கம் பதவி யேற்ற காலம் முதல் இன்றுவரை பேரினவாத கொள்கை களின் அடிப்படையில் வகுக்கப்பட்ட அரசியல் யாப்பின் அடிப்படையில் செயற்பட்ட அரசுகளே இலங்கையில் ஆட் சியை நடத்தி வந்துள்ளன. இப்போதும் நடத்தி வருகிறது.

இந்த அரசுகள் எல்லாமே சிறுபான்மையோரின் குறிப் பாக வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்களை அரசியல்ரீதியாக ஒதுக்கியும், இராணுவரீதியில் ஒடுக்கி யும் ஆட்சி செய்வதை ஒரு மரபாகவும், இலட்சியமாகவும் கருதச் செயற்பட்டு வந்துள்ளமை வரலாற்றுப் பதிவாகவே உள்ளது.

1958 இலிருந்து இன்றுவரை இந்தச் சிங்களப் பேரின வாத அரசுகளின் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை கள், இனப்படுகொலைகள், அவர்களின் தாயக நிலம் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் கண்டித்தும், எதிர்த்தும், நியாயம் கோரியும் அரசுக ளுக்கும் அவ்வப்போது பதவியிலிருந்து அதிகாரம்செய்த ஆட்சித் தலைமைகளுக்கும் தமிழர் தரப்பிலிருந்து அரசி யல் கட்சிகளாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், பொதுஅமைப்புக்களாலும், பொதுமக்களாலும் அனுப் பப்பட்ட, விடுக்கப்பட்ட கோடிக்கணக்கான அறிக்கை கள், மகஜர்கள், நடத்தப்பட்ட பேரணிகள் எழுப்பப்பட்ட கோஷங்கள் எதுவுமே பேரினவாத வெறிமுற்றிய நிலை யில் சிங்களத் தலைவர்களின் புத்த தர்மச் சிந்தனையின் கீழ் செயற்பட்ட சிந்தனையில் எந்தவிதமான தாக்கத் தையும் ஏற்படுத்தவில்லை என்ற கசப்பான உண்மையை நாம் தெளிவாக உணரவேண்டும்.

இனிமேலும் கூட அவர்கள் மனிதநேய அடிப்படையில் சிந்திப்பார்கள், நீதியான முறையில் அமைதியையும், சமா தானத்தையும் உறுதிப்படுத்துவார்கள் எனத் தமிழ் மக்க ளும், தமிழ் அரசியல்வாதிகளும் நம்புவதும், அவர்களிடம் அவர்களே இழைத்துவரும் கொடுமைகளுக்கு நியாயம் கோரி அறிக்கைகள் விடுப்பது வீணானதும், அர்த்தமற்ற சம்பிரதாய பூர்வமானதுமான செயற்பாடேயாகும்.


இந்தச் சமயத்தில் ஒரு தமிழ்க் கவிஞனின் எழுச்சி யுணர்வூட்டும் வரிகள் நினைவுக்கு வரவே செய்கிறது...

துப்பாக்கியை உன் நெஞ்சை
நோக்கி குறிவைத்தவனிடம்
நியாயம் கேட்காதே..!
அது உன்னைக் கோழையாக
மரணிக்க வைத்துவிடும்.
நிமிர்ந்து நின்று சா...!
அல்லது -
எதிர்த்து நின்று வெல்...!!

இதனை எதிரியிடம், அதுவும் இனவெறியுடன் நிற்கும் எதிரியிடம் நியாயம் கோரி அறிக்கை விடுவோர் சிந்திப்பது நல்லது.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

## நாடும் நடப்பும்




# மேஜர் ஜெயானந்தனின் வித்துடல் இன்று விதைப்பு

கிளிநொச்சி

வவுனியா - வலயன் கட்டுப் பகுதியில் கடந்த முன்றாம் திகதி படையினரின் ஊடுருவித் தாக்குதலில் வீரச்சாவ டைந்த வவுனியா மேற்கு அரசியற்துறைப்பொறுப்பாளர் மேஜர் ஜெயானந்தன் (செல்லத்தம்பி சுரேந்திரன்) மற்றும் நாட்டுப் பற்றாளர் தேவராசா வினோதன்ஆகியோருக்கு இன்று கிளிநொச்சியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள் ளது.



இன்று காலை 9 மணியளவில் கிளிநொச்சி வலயக் கல் விப் பணிமனை முன்பிருந்து இவர்களின் வித்துடல்கள் பாண்ட் வாத்தியத்துடன் ஊர்வலமாக கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டு அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, மாவீரர் மேஜர் ஜெயானந்தன், நாட்டுப் பற்றாளர் வினோதன் ஆகியோருக்கு வவுனியா வடக்கு, மேற்கு பகுதி மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

இன்று அஞ்சலி நிகழ்வையடுத்து மேஜர் ஜெயானந்த னின் வித்துடல் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும். நாட்டுப்பற்றாளர் வினோதனின் புக ழுடல் அவரது குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

# கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளுடன் பல்கலைச் சமூகம், அரச அதிபர் சந்திப்பு

யாழ்ப்பாணம்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயலாளர், யாழ். மாவட்டக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மற் றும் பிரதிநிதிகளுக்கும், யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் எஸ்.மோகனதாஸ், அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை யாழ். மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுமார் இரண்டு மணி நேரமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கடந்த 19 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக சமூகம் மேற்கொண்ட பேரணி மீது நடத்தப்பட்ட தாக் குதல் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் கேட்ட றிந்ததுடன், யாழ். மாவட்டத்தில் தாம் தொடர்ந்து பணியாற்றுவதாகவும் தெரிவித்தனர்.


அத்துடன் பல்கலைக்கழக சமூகத்துடன் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்வதுடன், பல்கலைக்கழக சூழ லில் பதற்றமான சூழல் நிலவுவதையும் ஏற்றுக்கொண்ட கண்காணிப்புக் குழுவினர் இது தொடர்பாகச் சம் பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிப்பதாகவும் கூறினர்.

இந்தச் சந்திப்பில் அரச அதிபர் கருத்துத் தெரி விக்கையில் -

பல்கலைக்கழக மாணவர்கள் மீது இனிவரும் காலத் தில் சோதனைகள் மேற்கொள்ளப்படமாட்டாதென யாழ். மாவட்ட இராணுவத் தளபதி எனக்கு உறுதி யளித்துள்ளார். அவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் துன்புறுத்தப்பட்டால் தனக்குத் தெரியப்படுத்துமாறும் அவர் தெரிவித்ததாக அரச அதிபர் குறிப்பிட்டார்.

எனினும் மாணவர்கள் மீது படையினர் தற்போதும் சோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும், பதற்ற மான சூழல் தொடர்வதாகவும், கற்றல் செயற்பாட்டுக் குரிய இயல்பு நிலை உருவாகவில்லையெனவும் மாண வர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் இந்தக் கோரிக்கைகளை நீக்குவதற் குத் தாம் படிப்படியாக முயற்சிகளை மேற்கொள்வதா கக் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர். இறுதியில் இருபகுதியினரும் அடுத்த வாரமும் சந்திப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.



# வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமெனில் சான்றுகளை முன்வைக்க வேண்டும்

## எல்லாவெல மேதானந்ததேரர் சவால்

கொழும்பு

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் என்பதற்கு ஏதேனும் சான்றுகள் உண்டா என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்ததேரர் சவால் விடுத் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம் எனக் கூறுபவர்கள் அதற்கான சான்றுகளை முன்வைக்க வேண்டும். அந்த நிலைப்பாட்டிலிருக்கும் பிரபாகரன், பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் அல்லது யாரும் அது தொடர்பான பகிரங்க விவாதத்துக்கு வரலாம்.

அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் யாதெனில் இந்த நாட்டிலிருப்பது கொலைகா ரப் பயங்கரவாதமே. நாட்டைப் பிளவுபடுத்தி தனி நாட்டை ஏற்படுத்தும் நோக்கில் சில தமிழர்களால் இந்தப் பயங்கரவாதம் தோற்றுவிக்கப்பட்டது.

எனினும் 99 வீதமான தமிழர்கள் இதனை விரும்ப வில்லை. விடுதலைப் புலிகளின் துப்பாக்கிக்கு அஞ்சி அவர்கள் மௌனமாக இருக்கின்றனர்.

வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழர் தாயகம் எனக் கூறி விடுதலைப் புலிகள் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்க ளைப் பொறிக்குள் சிக்கவைத்துள்ளனர்.

எனினும் அவர்கள் உலகிற்கு இதனை விடுதலைப் போராட்டமாகக் காண்பிக்கின்றனர். அப்படியான தாயகம் ஒன்று இந்த நாட்டுத் தமிழர்களுக்கு அவசிய மில்லை. குடியேற்றங்கள், அபிவிருத்தி மற்றும் கலாசாரத்தைத் தோற்றுவிக்கும் மக்கள் குழுக்களுக் கமையவே தாயகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இந்த நாட்டின் தாயகம் சிங்களவர்களுக்கே சொந்த மானது. எனினும் வேறு இன மக்களுக்கு இங்கு வாழ்வ தற்கோ, வாழ்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வ தற்கோ தடைகள் இல்லை.

வடக்கு - கிழக்கைத் தமிழர் தாயகம் என்று விடுத லைப்புலிகள் கூறுவார்களாயின் அதற்கான சான்றுகளை அவர்களே முன்வைக்க வேண்டும் என்று எல்லாவெல மேதானந்ததேரர் தெரிவித்தார். (01)

அரசியல்கட்டுரை.....

# இலங்கை அரசு ஒற்றையாட்சியை வலியுறுத்தினால் மீண்டும் போர் என்பது தவிர்க்க முடியாததாகிவிடும்!

— மக்கள் கவிஞர் இன்குலாப்



சென்னையில் ஒரேநாளில் இரு கூட்டங்கள் நடைபெறுவது தமிழர்களாகிய நமக்கு நிறைவுதரக் கூடிய ஒன்று. மகிழ்வு தரக்கூடியது என்று சொல்லமாட்டேன்.

ஏனெனில், இந்த அக்கறை மீண்டும் கனல ஆரம்பித்திருக்கிறது. சுட ஆரம்பித்திருக்கிறது. இது அவசியமானது ஒன்று என்று நான் கருதுகிறேன்.

நான் ஈழத்துக்குச் சென்று வந்திருக்கிறேன். போர்பற்றிய செய்தியைப் படித்திருக்கலாம். சித்தரிப்பைப் படங்களில் பாாத்திருக்கலாம். நானும் அப்படிப் படித்திருக்கிறேன். ஆனால், யாழ்ப்பாணத்துக்கு நாங்கள் ஒரு குழுவாகப் பயணம் மேற்கொண்ட போது போரின் சுவடுகளை நேரடியாகப் பார்த்தேன்.

பல கட்டடங்கள் காயப்பட்டு இருந்தன. மனிதருடைய காயங்கள் வேறுவிடயம். பல கட்டடங்களுக்கு யன்னல்கள் கிடையாது. ஷெல்லடியால் தகர்ந்து போய்விட்டன. அம்மைத் தழும்பு போல அந்தக் கட்டடங்களில் குண்டு பாய்ந்த அடையாளங்கள் இருந்தன.

போகின்ற வழியெல்லாம் மிதிவெடிகள் குறித்த எச்சரிக்கை. புதிய நிலத்தில் நடக்காதீர். பழகிய பாதையில் செல்லுங்கள் என்று ஒவ்வொரு திருப்பத்திலும் சிவப்புப் பலகைகளில் எழுதி வைத்திருந்தார்கள். ஒரு நீண்டநேர பயணம் அது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போய்ச் சேர்வதற்கு 10 மணிநேர பயணம் அது.

சிங்களப் பகுதிகளைத் தாண்டி தமிழீழப் பகுதிக்குள் நுழையும் போதே வண்டி தடுமாறத் தொடங்கியது. ஏனென்றால், சாலைகள் எதுவும் சரியாக இல்லை. மிக கரடுமுரடான பாதை. வாகனத்திலிருந்து நாங்கள் கீழே இறங்கும் போது திரும்புகிற பக்கம் எல்லாம் இத்தகைய அறிவிப்புகள். நடப்பதற்கே அச்சப்படக்கூடிய சூழல்.

பனைமரத்தைத்தான் யாழ்ப்பாணத்தின் குறியீடாகச் சொல்வார்கள். காசி ஆனந்தன் ஒரு அருமையான பாடலை எழுதியிருக்கிறார். "அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும்" என்று. நாங்கள் பார்த்தது பனைமரங்களை அல்ல, தென்னை மரங்களை அல்ல. வெறும் குச்சிகளைத் தான் பார்த்தோம். ஒரு மரத்தில்கூட, ஒரு கீற்றுக்கூட இல்லை. இது ஒரு அடையாளம். விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டதால் இயற்கை எவ்வாறு சீரழிக்கப்பட்டது என்பதற்கு நாங்கள் பார்த்த ஒரு அடையாளம். பனைமரம் அழிகிறது என்றால் யாழ்ப்பாணத்து அடையாளம் அழிகிறது என்பது தான் பொருள்.'

அதற்குப் பிறகு அங்கு நடைபெற்ற மாநாட்டில் நான் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்குப் பின்னால் ஐயா இன்குலாப் அவர்களே உங்களோடு கதைக்க வேண்டும் என்று ஒரு பெண் கூறினார். இரவு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த நான் திரும்பிப் பார்த்தேன். கண்ணாடி அணிந்திருந்த பெண் அழைத்தார். நான் சரி என்றேன். கலை நிகழ்ச்சிக்குப் பிறகு வெளிச்சம் வந்தபோது அந்தப் பெண்ணைப் பார்த்தேன். ஒரு கண் இருக்கவில்லை. அந்தப் பெண்ணுக்கு ஒரு கை இல்லை. பலருக்கு இப்படியான நிலைதான் இருந்தது. நான்அந்தப் பெண்ணைப் பார்த்த போது ஒரு நிமிடம் தயங்கி விட்டேன். ஆனால், அவர் சொன்னார் அய்யா நீங்கள் ஒன்றும் நினைக்காதீர்கள். நாங்கள் சரியான காரணத்துக்காகத்தான் இவற்றை இழந்திருக்கிறோம் என்றார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

இப்படிப் போரின் துயரங்களை நாங்கள் பார்த்தோம். நான் சொன்னது கொஞ்சம் தான். ஒவ்வொரு குடும்பமும் இதற்கு விலை கொடுத்திருக்கிறது. வியட்நாமிய இறுதி மக்கள் யுத்தம் போல், யாழ்ப்பாணத்தில் இறுதி மக்கள் யுத்தம் நடப்பதாக இங்கே பேராசிரியர் சரசுவதி கூறினார்.

வியட்நாமிய விடுதலைப் போராட்டவரலாற்றில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு வீரரை அல்லது வீராங்கனையை அர்ப்பணிப்புச் செய்திருக்கிறது என்று சொல்வார்கள். யாழ்ப்பாணத்தில் அதற்கும் கூடுதலாகவே நடைபெற்றிருக்கிறது. இது பேராசிரியர் சரசுவதி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் -யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்கள் மட்டும் அல்ல அந்தப் போரில் அதே வயதிலான சிங்கள இளைஞர்களும் பலியாகி இருக்கிறார்கள். யுத்தத்திற்கு வந்துவிட்டால் குறைந்தபட்ச விலை உயிர தான். இரண்டு தரப்பும் விலை கொடுத்திருக்கிறது. ஆனால், இதற்கான காரணம் என்ன என்பது தான் முக்கியமானது.

ஒரு இனத்தை இன்னொரு இனம் அடையாளத்தால் மறுப்பது. அந்த இனத்தின் மீது வல்லாதிக்கம் செலுத்த முயல்வது இது நீண்ட காலமாக நீடித்துக் கொண்டிருக்கிறது. இலங்கைக்கு விடுதலை வந்ததாக சொல்லப்படுகிற காலத்தில் இது தீரும் என்றால் மாறாக அதிகரித்து இருக்கிறது. இலங்கைக்குச் சிங்களம் மட்டும் தான் தேசிய மொழி என்று அறிவிக்கப்பட்டதோ அன்று இது தொடங்கிவிட்டது. ஏனெனில், இலங்கை என்பது இரண்டு பெரும்பான்மையான தேசிய இனங்களைக் கொண்ட நிலப்பகுதி என்பதுதான் உண்மை. முஸ்லிம்களால் பிரச்சினை வராது. முஸ்லிம்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தங்களைத் தனியான தேசிய இனமாக ஏற்கக் கோருவது தொடர்பாக நிறைய விவாதங்கள் உண்டு. அவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என்பதுதான் அடிப்படை உண்மை.

இலங்கையை விட அளவில் குறைவான நாடுகள் உள்ளன. சுவிசில் 4 மொழிகள் சமமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சமத்துவம் மறுக்கப்படக் கூடிய இடத்தில் போராட்டம் தவிர்க்கப்பட முடியாதது. இலங்கையில் சமத்துவம் மறுக்கப்பட்டது.

ஈழத்தில் தனிநாட்டுக் கோரிக்கை என்பது வானத்திலிருந்து குதித்தது அல்ல.

தமிழரசுக் கட்சித் தலைவர் தந்தை செல்வா முதலில் தனிநாடு கோரவில்லை. இலங்கை அரசியலுக்கு உட்பட்ட நிலையில் உரிமை கோரிக்கையை, சமத்துவம், தனிமாநிலம் எனக் கேட்டார்.

அவை மறுக்கப்பட்ட பின்னர்தான் தனிநாடு கோரிக்கை எழுந்தது.

தந்தை செல்வா உட்பட தமிழர் தலைவர்கள் வலியுறுத்திய சமத்துவம், தனிமாநிலக் கோரிக்கைகள் வன்முறை சார்ந்து நடைபெறவில்லை. அவை அனைத்தும் சத்தியாக்கிரகப் போராட்டங்களாக நடைபெற்றன.

இலங்கை அரசுதான் இந்தப் போராட்டங்களை வன்முறைப் போராட்டமாக மாற்றியது. வன்முறை அற்ற ஒரு போராட்டத்தை மேற்கொண்ட தமிழர்கள் உதைக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, அவமதிக்கப்பட்டார்கள்.வீதிகளில் இழுத்துவரப்பட்டார்கள்.

இதனது தவிர்க்க முடியாத விளைவு தனிநாடுக் கோரிக்கையாக மாறியது. இலங்கையில் மட்டும் அல்ல உலக அளவிலும் இப்படித்தான் மாறும்.

ரஷியப் புரட்சி நடந்த உடன் ரஷியாவின் பெயரை சோவியத் ஒன்றியம் என்று மாற்றினார் லெனின். தனித்தேசிய இனம் பற்றிய பெருமிதத்தைத் துறந்தவர் லெனின்.

இது ரஷியா அல்ல. அதை ஏற்க முடியாது என்று சொன்னவர் லெனின். சொந்தத் தேசிய இனம் பற்றிய பெருமிதத்தை துறந்தவர் லெனின்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து எந்த நாடும் பிரிந்து செல்லலாம் என்றார். ஏனென்றால், ஜார் மன்னர் ஆட்சிக் காலத்தில் பல நாடுகளின் பகுதிகள் வன்மையாக பிடித்து வைக்கப்பட்டிருந்தது. ஆகையால், அதற்கு லெனினிடமிருந்து அத்தகைய குரல் வந்தது.

ஒரு அரசியல் அமைப்பில் பல்வேறு தேசிய இனங்கள் இணைந்திருக்கும் போது இனங்களின் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் உறுதி செய்வது என்பது சுயநிர்ணய உரிமைதான்.

இந்திய ஒருமைப்பாடு பற்றிப் பேசுகிறவர்கள் சோசலிசப் புரட்சியின் மூலம் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சுயநிர்ணய உரிமை என்பது வேறு பொருளில் சொல்ல வேண்டுமானால் "பிரிந்து செல்ல விரும்பினால் பிரிந்து செல்லலாம்" என்பதுதான். இதைத்தான் லெனின் அறிவித்தார்.

நான் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமை பற்றி பேசக் காரணம் பெரியார்,அண்ணா எழுதிய எழுத்துக்கள் எல்லாவற்றையும் விட லெனினுடைய வாதங்களும், சிந்தனைகளுமே என்னைக் கூர்மைப்படுத்தியது.

அவர் பிரிந்து செல்ல மட்டுமே சுயநிர்ணய உரிமை என்றார். ஆனால், ரஷியக் கம்யூனிஸ்ட் கட்சியில் மாறான நிலைப்பாடு. ஸ்டாலின் ஒரு ஜார்ஜியன். ஆனாலும், இதை ஸ்டாலின் எதிர்த்தார்.

லெனின் மறைவுக்குப் பின்னர் அவரது கனவு தூள் தூளானது. அதை நாம் கண் முன்னாலேயே பார்த்தோம்.

ஒரு இனத்தினது மொழியை அங்கீகரிக்க வேண்டும், அதிகாரம் வேண்டும், என்று சொல்வது ஜனநாயகத்தின் மிகச் சிறந்த கோரிக்கைகள்.

சமத்துவத்தை நிலைநாட்டும் எல்லா முயற்சியும் ஜனநாயகம் சார்ந்ததே. இந்தியாவில் அது நடக்கவில்லை.

1922-ல் காந்தியடிகள் காங்கிரஸ் மாநாட்டில் குறிப்பிடுகிறார்... இந்தியா விடுதலை பெறும் போது பல்வேறு தேசிய இனங்கள் தங்களது விருப்பத்தின் பேரில் சேர்ந்து இருக்கும் என்றார்.

இது 1948ஆம் ஆண்டு வரை இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் காங்கிரஸ் கட்சிகளினது கோட்பாடாக இருந்தது.

சுயநிர்ணய உரிமை என்பது கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் இருந்தது. ஆனால், திடீரென்று அகில இந்தியப் பார்வை வந்தது. அண்மைக்காலமாக வரலாற்றுப் படிப்பினைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

இலங்கையிலே புத்த மதம் என்பது சிங்கள மதம். அது தமிழர்களை ஒன்று சேர்க்கப் பயன்படவில்லை.

மத அடிப்படையில் பாகிஸ்தான் பிரிந்தது. ஆனால், அந்த பாகிஸ்தானிலிருந்துதான் வங்கதேசம் பிரிந்தது.

மதத்துக்கு- இனங்களை ஒன்றிணைக்கக் கூடிய சக்தி இல்லை. அப்படி இருந்தால் ஒரே இஸ்லாமிய நாடு என்று வந்திருக்க வேண்டும். மத்திய ஆசியாவிலேயே பல இஸ்லாமிய நாடுகள் தனியே உள்ளன.

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைக் கணக்கில் எடுத்தால் சில தேசிய இனங்கள் வரலாற்று ரீதியாக தொன்மை, தனித்தன்மை கொண்டிருக்கிறது. அந்த இனங்கள் விருப்பத்தின் பேரில் சேர்ந்திருக்கிறது என்பதை அங்கீகரிப்பதன் மூலமே அந்த தனித்தன்மை மதிக்கப்பட வேண்டும். அதை மறுப்பது என்பது சரி அல்ல.

'துக்ளக், சோ' போன்றவர்கள் இலங்கையின் தமிழர்கள் குடியேறியவர்கள் என்று சொல்லி வருகிறார்கள்.

ஈழத் தமிழர்கள் அந்த மண்ணை தாயகமாகக் கொண்டவர்கள் ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல் சங்க இலக்கியத்திலேயே இடம்பெற்றுள்ளது. ஈழம் என்பது நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிற சொல்.

அங்கே போய்க் குடியேறியவர்கள் யார் எனில் கொழும்பில் வணிகத்துக்காகப் போன மரைக்காயர், செட்டியார்கள்தான்.

அடுத்து கண்டி போன்ற மத்திய இலங்கைப் பகுதிகளில் 200 ஆண்டுகளுக்கு முன்பாக கூலிகளாகத் தமிழகத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள்.

தமிழ் நாட்டில் கங்காணிகளால் ஏமாற்றிக் கொண்டு செல்லப்பட்டவர்கள் அவர்கள்.

அன்று கண்டி என்பது மலைப்பிரதேசமாக மட்டுமே இருந்தது. கோப்பித் தோட்டம் போடலாம் என்று ஆங்கிலேயர்களால் இறக்கப்பட்டவர்கள் - தமிழ்நாட்டின் சாதிய ஒடுக்குமுறை நிலப்பிரபுத்துவக் கொடுமைகளுக்குள்ளானவர்கள் இலங்கைக்குப் போனால் செல்வாக்காக வாழலாம் என்ற ஏமாற்றுக் கருத்துக்களால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள்.

குடும்பம் குடும்பமாக அங்கே போய்ச் சேர்ந்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்கொண்டதெல்லாம் காட்டு விலங்குகளும், பூச்சிகளும், தொற்று நோய்களும் தான்.

அதற்கு ஈடுகொடுத்து காடுகளை அழித்து, கோப்பித் தோட்டங்களை உருவாக்கினார்கள். போர்த்துக்கீசியர்களுக்குப் போட்டியாக ஆங்கிலேய அரசாங்கம் தமிழர்களை வைத்து கோப்பித் தோட்டங்களை உருவாக்கியது.

ஏனெனில், எந்த வம்பும் செய்யாதவன் தமிழன். அது உண்மை. 4 சீனர்கள் சேர்ந்தால் தொழிற்சங்கம் அமைப்பார்கள்.

அந்தக் கால கட்டத்தில் கறுப்பின அடிமை முறை ஒழிககப்பட்டு ஒப்பந்தக் கூலி முறை உருவான காலம்.

அதற்குப் பயன்பட்டவர்கள் ஒடுக்கப்பட்ட தமிழர்களே.

அவர்களே இலங்கைக்கும், பர்மாவுக்கும், பீஜிக்கும், தென்னாபிரிக்காவுக்கும், மலேசியாவுக்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

கோப்பித் தோட்டங்களில் அமோக லாபம் கிடைக்கவே கண்டி - கொழும்புக்குப் பாதை உருவாக்கப்பட்டது.

கோப்பித் தொழிலில் நட்டம் ஏற்பட்ட காலத்தில் தான் தேயிலைத் தோட்டங்கள் வர ஆரம்பித்தன. தென்கிழக்கு ஆசிய பகுதியில் பெரிய தொழிற்சங்கமாக மலையகத் தொழிற்சங்கங்கள் உள்ளன.

இலங்கைக்கு விடுதலை வந்த பிறகு சிங்களப் பேரின முதலாளிகள் மற்றும் தமிழ் முதலாளிகளுக்கும்கூட தமிழர்களின் உதவி மறந்து போய்விட்டது.

அந்த மக்கள் தங்கள் அளவில் இடதுசாரிச் சிந்தனை யாளர்களாக இருந்தனர்.

தமிழ் உணர்வு கொண்டவர்களாக இருந்தனர்.

இது சிங்களவர்களை அச்சுறுத்தியது.

உலக நாடுகளில் நீங்கள் ஒரு நாட்டில் 2 அல்லது 5 ஆண்டுகாலம் இருந்தால் குடியுரிமை உண்டு. ஆனால், இலங்கையில் 150 ஆண்டுகளுக்குப்பிறகும் சிறிமா - சாஸ்திரியின் கேடுகெட்ட ஒப்பந்தத்தால் தமிழர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டு 7 லட்சம் தமிழர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஒவ்வொரு மக்களுக்கும் குடும்பமும் அந்த மண்ணிலே சிந்திய கண்ணீர் இரத்தமும் எதுவுமே மதிக்கப்படவில்லை. ஒரே நாளில் ஒரே ஒப்பந்தம் மூலம் 7 லட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர்.

இதைச் சொல்வது -ஏனென்றால் இலங்கையிலே கவனிக்கப்படாத விடயமாக மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள் என்பதை விளக்குவதற்காகவே.

பேராசிரியர் சரசுவதி சொன்னதுபோல் - போரில் பின் தங்கிய நிலையில் பிரபாகரன் போர் நிறுத்தம் செய்யவில்லை. தனிநாடு கோரிக்கையைக் கைவிடவில்லை.

வலுவாக இருந்து கொண்டே உலக யதார்த்தத்தையும், ஈழ யதார்த்தத்தையும் உள்வாங்கிக் கொண்டு பிரிந்து செல்லும் உரிமை கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்து ஒரு கூட்டமைப்பாக செயல்பட பிரபாகரன் முன்வந்தார்.

சிங்கள - தமிழ் அரசுகள் இணைந்து ஒரு கூட்டமைப்பாக இருக்கலாம் என்றார்கள்.

இது தனிப்பட்ட முடிவாகவும் அல்லாமல் பல்வேறு இயக்கங்களின் கூட்டு முடிவாக அறிவிக்கப்பட்டது.

இது பேச்சுவார்த்தையிலும் வந்தது. அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் சமாதானத்தை அனுமதித்தார்கள். அவர்கள் முகத்தில் அமைதியும், புன்னகையும் இருந்தது.

மீண்டும் சிரிக்கக் கற்றுவிட்டார்கள். தெளிவாகச் சொன்னார்கள்- "நாங்கள் மண்டியிட்டு சமாதானத்தை ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்பதில் தெளிவாக இருந்தார்கள்.

நோர்வே அமெரிக்காவின் மென்மை முகம், இஸ்ரேல் என்பது கோரமுகம் என்று தெளிவாகச் சொன்னார் பிரபாகரன்.

இப்போது நோர்வேயின் மென்மை முகத்துக்கு பதில் இந்திய முகத்தை நிறுவ முயற்சிகள் நடக்கின்றன.

இந்தியாவுக்குத் தொடக்கத்தில் இருந்தே தமிழ் மக்களின் பிரச்சினை குறித்த அக்கறை இல்லை. தனது எல்லை விஸ்தரிப்பு என்ற கோட்பாட்டுடனேயே அரசியல் நலன் சார்ந்தே இந்த விடயத்தை அணுகியது.

இலங்கை இந்தியாவுடன் இணைந்த தனிமாநிலமாக இருக்கலாம் என்று இந்திய விடுதலைக் காலத்திலேயும் சொன்னார்கள். இப்போதும் சுப்பிரமணியசுவாமி அதையே சொல்கிறார்.

இந்திய அரசியல் சாசனமும் இந்த விஸ்தீரணப்படுத்துகிற போக்கை அனுமதிக்கிறது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை இந்தியாதான் தீர்மானிக்க வேண்டும் என்றார் போரசிரியர் சரசுவதி. நான் அதில் உடன்பட்டு கூட மற்றொன்றையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற நாட்டினது தன்னதிகாரத்தையும், இறையாண்மையையும், சுயேட்சைத் தன்மையையும் ஏற்றுக்கொண்ட வெளியுறவுக் கொள்கை அவசியமானது என்பதே அதுவாகும்.

இலங்கை அரசு கோரக்கூடிய ஒற்றையாட்சி இந்தப் பிரச்சினைக்கான தீர்வுக்கு போதுமானது அல்ல.

இதை அந்த அரசு வலியுறுத்தினால் போர் தவிர்க்க முடியாதது.

யாருமே போரை விரும்பவில்லை.

ஏகாதிபத்திய சக்திகள் திணித்த இந்தப் போருக்கு முதலில் தமிழர்கள் முகம் கொடுத்தார்கள். இனி சிங்கள மக்கள் முகம் கொடுப்பார்கள்.

ஈழப் பிரச்சினை பற்றி பேசுகிற நாம் தமிழ்நாட்டிலும் சுயாட்சி - தன்னாட்சி - பிரிந்துசெல்கிற உரிமை தொடர்பாக மக்களிடத்திலே விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியம்.

*

# திருமலையில் படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் இறுதி நிகழ்விலிருந்து.....!







சடலங்கள் முன்னால் கதறியழும் உறவுகள்





இறுதிப் பயணதில் கலந்துகொண்ட மாணவர்களும் பொதுமக்களும்





கொதித்துப்போயிருக்கும் மாணவர்களால் அடித்துநொருக்கப்பட்ட படையினரின் காவலரண்கள்

## இந்தோனேஷியாவில் நிலச்சரிவு

ஜகார்த்தா—

இந்தோனேஷியா நாட்டிலுள்ள சிஜெருக் என்ற மலைக் கிராமத்தில் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் ஏராளமான வீடுகள் சிக்கிக் கொண்டன. இதில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் இதே பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு 71 பேர் பலியாகியிருந்ததுடன் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஏலத்தில் விற்கப்படவுள்ள இரட்டைத் தலைப் பாம்பு!



6 வயதுடைய இரட்டைத்தலைப் பாம்பு ஒன்றை ஒரு லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலரிலிருந்து ஏலம் விடுவதற்கு உலக நீர்வாழ் உயிரினங்களின் காட்சியகத் தலைவர் லெனாட் சொனஸ்ரின் கடந்த 2 ஆம் திகதி தீர்மானித்துள்ளார்.

இந்த இரட்டைத்தலைப் பாம்பு முன்னர் வைத்திருந்தவரிடமிருந்து பதினையாயிரம் அமெரிக்க டொலர் கொடுத்து வாங்கப்பட்டது. இதற்கு அதிக விலை கொடுக்காததற்கு காரணம் இவ்வகையான பாம்புகள் அதிக காலம் உயிர் வாழமாட்டாதென்பதனாலேயாகும். எனினும் இந்த பாம்பு தற்போது ஆறு வயதைக் கடந்துள்ளது.

## ஈரான் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்காவின் திட்டம் தயார்!

புதுடில்லி—

ஈராக்கில் தொடர்ந்து வன்முறைகள் இடம்பெற்றுவரும் நிலையில், இந்த ஆண்டு ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த சில மாதங்களில் ஈரானின் அணுவாயுதத் தயாரிப்புப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தும் தன் திட்டத்தையும் அமெரிக்கா இறுதி செய்து விட்டது. தாக்குதலுக்குத் தயாராக இருக்குமாறு நேட்டோ நாடுகளையும் அமெரிக்கா ரகசியமாக கோடிட்டுக் காட்டியுள்ளது.


ஈராக்கில் சதாம் மீது இராணுவ நீதிமன்றில் விசாரணை நடந்து வருகிறது. இன்னும் சில மாதங்களில் ஈராக்கிலிருந்து முழுமையாக அமெரிக்க இராணுவம் வெளியேறிவிடும். இந்த நிலையில், தன் அடுத்த இலக்கை நோக்கி, அமெரிக்க இராணுவம் நகரத் தயாராகிவிட்டது என்றே தோன்றுகிறது.

ஏற்கனவே அணுவாயுத விடயத்தில் ஈரான் தன் பிடிவாதத்தை விட மறுக்கின்றது. இதனால் அதனை அடக்கி, அணுவாயுத இலக்குகளை ஒடுக்க வேண்டிய அவசியம் பற்றி, நேட்டோ நாடுகள் கூட்டமைப்பில் பல முறை எச்சரிக்கையும் விடப்பட்டது.

அதையும் மீறி, ஈரான் தொடர்ந்து அணுவாயுதத் தயாரிப்பை மேற்கொண்டு வருகிறது. எனவே, அதன் மீது தாக்குதல் நடத்தி, அணுவாயுத பயங்கர சூழ்நிலையைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. அதற்காக மீண்டும் நேட்டோ நாடுகளுக்கு அறிவுறுத்தலும், அனுப்பப்பட்டுள்ளது என அமெரிக்க இராணுவ புலனாய்வு அமைப்புத் தகவல்கள் பற்றி செய்தி வெளியிட்ட ஜேர்மனி பத்திரிகையான டெர் ஸ்பைகல் சூசகமாக குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா எந்த நேரத்தில் தாக்கும் என்று தெரியவில்லை. ஆனால் அடுத்த சில மாதங்களில் இந்தத் தாக்குதலை ஈரான் மீது நடத்தும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது என்றும் அந்த பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ யின் தலைவர் போர்ட்டர் கிராஸ், சமீபத்தில் துருக்கிக்குச் சென்று அந்த நாட்டுப் பிரதமர் ரிகெப் தாயிப் ரெடோகனை சந்தித்து, துருக்கி தலைநகர் அங்காராவை, அமெரிக்க இராணுவம் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும்




என்று கேட்டுக்கொண்டதையும் அந்தப் பத்திரிகை மேற்கோள் காட்டியுள்ளது.

ஏற்கனவே இது தொடர்பாக கடந்த ஆண்டு இறுதியில், நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையும் தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தியில் - ஈரான் மீது தாக்குதல் நடத்த பூர்வாங்க நடவடிக்கைகளை அமெரிக்கா எடுக்கத் தொடங்கிவிட்டது.

ஈரானில், அணுவாயுத இடங்களையெல்லாம் கண்டறிந்து, எப்படித் தாக்கினால் முழுமையாக அழிக்க முடியும் என்பது பற்றிய தகவல்களைச் சேகரிக்க இரகசிய கொமாண்டோக்களை அது அனுப்பிவிட்டது. அவர்களும், தகவல்களை அனுப்பிவிட்டனர் என்று கூறியிருந்தது.

இதன் பின்னணியில், புத்தாண்டு பிறந்த நிலையில், நேட்டோ நாடுகளுக்கு அமெரிக்கா, இரகசிய கடிதமும் அனுப்பியுள்ளது. அணுவாயுதம் இல்லாத உலகைப் படைக்க நாம் ஒற்றுமையாகச் செயலாற்ற வேண்டும். இதற்கு இப்போது நேரம் வந்து விட்டது. எந்த நேரத்திலும் நாம் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அதில் சூசகமாக ஈரான் மீதான தாக்குதல் தொடர்பான தகவலை குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க புலனாய்வுத்துறை இப்பொழுதுதான் இது தொடர்பான தகவல்களை இரகசியமாக உலவவிட்டுள்ளது. அடுத்த சில நாட்களில், ஈரானின் அணுவாயுத விடயம் குறித்து நேரடியாகக் கண்டிக்கும். அதன் பின்னர், ஈரான் மீதான தாக்குதலுக்கு நேரம் குறிக்கும் என்று புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளுக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும்



## மங்கள சமரவீர தெரிவிப்பு

வொஷிங்டன்—

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக ளுக்கு சர்வதேச சமூகம் கண்டன அறிக்கை களை வெளியிடுவதைத் தவிர்த்து, உறுதி யான நடவடிக்கையை மேற்கொள்ளு மென இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்ப தாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார். மூன்று நாள் விஜய மாக அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர் மங்கள சமரவீர, அங்கு வொஷிங்டன் ரைம்ஸிற்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப்புலிகளுக்கு வெளிநாட்டில் வழங்கப்படும் நிதிகளைக் கட்டுப்படுத் துவதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுதலைப்புலிகள் ஒரு அமைப்பல்ல. மாறாக அவர்கள் அல்கொய்டா அமைப்பை விட மோசமான செயற்பாட்டை மேற்கொண்டுள்ளனர். இதனை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# வாழைச்சேனையில் கிரனேட் வீச்சு இளைஞன் பலி, மூவர் படுகாயம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு-வாழைச்சேனை யில் குணம் தனுஸ் (வயது 22) என்ற இளைஞர் நேற்றிரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப் பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர்.

வாழைச்சேனை கனகரட்ணம் வீதியில் இந்துக் கல்லூரி அருகாமை யிலுள்ள தையல் கடை முன்பாக நின் றிருந்த இளைஞர்கள்மீது அடையாளம் தெரியாத குழுவினர் கைக்குண்டு வீசி யும், துப்பாக்கியால் சுட் டும் தாக்குதல் நடத்தினர். இதில் சம்பவ இடத்தில் குணம் தனுஸ் உயிரிழந்தார்.

மதனராஜ்(வயது 20), சரத்குமார் (வயது20), கலா (வயது 58) ஆகி யோரே படுகாயமடைந்ததாக அடை யாளம் காணப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தோர் முதலில் வாழைச்சேனை மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட் டக்களப்பு மருத்துவமனைக்கு மாற் றப்பட்டனர். உயிரிழந்த குணம் தனு சின் உடல் வாழைச்சேனை வைத் தியசாலையில் பிரேத பரிசோதனைக் காக வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கான கார ணம் தெரியவில்லை என்று வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்த னர்.

## வவுனியாவில்...

ஜெயந்திகார படுகாயமடைந்தார். இன்னொரு சிப்பாய் சிறு காயங்க ளுக்குள்ளானார்.

இந்த உழவு இயந்திரத்தில் 7 படையினர் பயணம் செய்த போதும் - ஏனையோர் காயமின்றி தப்பிக் கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் படுகாய மடைந்த இராணுவ சார்ஜன்ட் வவு னியா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட் டார்.

## திருமலையில்...

இதேவேளை, திருகோணமலை நகரில் நீதிமன்ற வீதியில் நேற்றிரவு கடற்படையினரின் இரு காவலரண் கள் மீது கிரனேட் வீசப்பட்டபோதும் - அது வெடிக்கவில்லை என்றும், இரவு 9 மணியளவில் கடற்படையினர் இவற்றை செயலிழக்கச் செய்ததாக வும் தெரியவருகிறது. (10)

## பயிற்சி...

கப்பலும் பாங்கு கொள்கிறது.

இதன் பாலுமிகள் மிலன் 2006 போர்ப் பயிற்சி நடவடிக்கைகளின் போது இடம்பெறும் கருத்தரங்குகள், வேலைப் பட்டறைகள் மற்றும் பயிற் சிகளில் ஈடுபடுவர் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14ம் திகதி வரை சயுர கப்பல் போர்ட் பிளையர் துறைமுகத் தில் தரித்து நிற்கும் என அறிவிக்கப் பட்டது.

## இலங்கையின்...

நாட்டுடன் எந்தப் பிரச்சினை குறித் தும் பேச்சு நடத்தமாட்டோம்.

நோர்வேயை நாட்டின் எதிரணி யாகவே பார்க்கிறோம். விடுதலைப் புலிகளுக்கு அந்நாடு பக்கச்சார்பாக இருப்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

நோர்வேயுடன் பேச்சுக்களை நடத்தி எமது நேரத்தை நாம் வீண டிக்க விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் கொல்லப்பட்ட...

ஊர்தியில் ஐந்து மாணவர்களின் சட லங்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு - நண்பகல் 12.20 மணி யளவில் திருகோணமலை இந்து மயானத்தில் அருகருகே அமைக்கப் பட்டிருந்த புதைகுழிகளில் நல்லடக் கம் செய்யப்பட்டன.

இதேவேளை - மாணவர்களின் இறுதி ஊர்வலம் இடம்பெற்ற பிரதான வீதி, மடத்தடிச்சந்தி, கிருஷ்ணன் கோவி லடி போன்ற பகுதிகளில் கடமையிலி ருந்த படையினர் மற்றும் பொலிஸார் ஊர்வலம் இடம்பெற்றபோது முற் றாக அகற்றப்பட்டிருந்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக மேற் கொள்ளப்பட்டுவந்த ஹர்த்தால் நேற் றுக்காலை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டதையடுத்து - மாணவர் களின் அஞ்சலி நிகழ்வுக்கு பெரும் திர ளான பொதுமக்கள் இந்துக் கல்லூரி மைதானத்தில் திரண்டனர்.

ஊர்வலம் சென்ற பிரதான வீதி யிலுள்ள இராஜவரோதயம் வீதிச் சந் திக்கு அண்மையில் அமைக்கப்பட்டி ருந்த இராணுவக் காவலரண், சிவன் வீதிச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த காவலரண் மற்றும் மடத்தடிச் சுற்று வட்டத்தில் பிரதான வீதிக்கு அண் மையில் அமைக்கப்பட்டிருந்த காவல ரண்கள் ஆத்திரமுற்ற இளைஞர்க ளால் அடித்துநொருக்கி தீயிடப்பட்டன.

இறுதி ஊர்வலம் சென்ற பாதை யின் அனைத்துப் பிரதான சந்திகளி லும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கடமையில் ஈடுபட்டிருந்த னர்.

நகரெங்கும் சோகமயமாகக் காட் சியளித்த அதேவேளை - வீடுகள், கடைகள், நிறுவனங்கள் தொடர்ந்து பூட்டப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

சில பகுதிகளில் கறுப்புக் கொடி களை இறக்குமாறு கடற்படையினர் பொதுமக்களை தாக்கியதாகவும் அறியமுடிகிறது.

நேற்றுமாலை முதல் மீண்டும் ஹர்த்தால் காலவரையறையின்றித் தொடருமென்று பொங்குதமிழ் சமூ கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (10)

# நிர்வாகசேவை ஆட்சேர்ப்பு பரீட்சை 28 ஆம் திகதியே

## பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு—

இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற் கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி கொழும்பில் நடத்துவ தற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையா ளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரி வித்தார்.

இந்தப்பரீட்சையை கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற் கான அனுமதிப்பத்திரங்கள் பரீட் சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பப் பட்டிருந்தன.

ஆனால், யாழ்ப்பாணத்தில் தற் போது ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து இந்தப் பரீட்சையை முன்னர் குறிப்பிட்ட திகதியில் நடத்த முடியா மற் போனது.

இந்த நிலையில் எதிர்வரும் 28ஆம் திகதி இந்தப் பரீட்சையைக் கொழும்பில் 191 பரீட்சை நிலையங்க ளில் நடத்துவதெனவும், பரீட்சார்த்திக ளுக்கான அனுமதிப்பத்திரங்கள் அடுத்த சில தினங்களில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுமென வும், இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளுடன் தற்போது வழங்கப்படவுள்ள அனுமதி அட்டைக ளையும் சேர்த்து பரீட்சார்த்திகள் வழங்கவேண்டுமெனவும் பரீட்சை கள் ஆணையாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பரீட்சை நடைபெறும்.

ஏற்கனவே எதிர்வரும் 7ஆம் திகதி இந்தப் பரீட்சை நடைபெறு மென அமைச்சர் கலாநிதி சரத் அமு னுகம முன்னர் தெரிவித்திருந்தமை யும் குறிப்பிடத்தக்கது. (தே)

# கிரானில் இளம் குடும்பஸ்தர் படையினரால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு—

ஒரு குழந்தையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவர் மட்டக் களப்பு - கிரானில் நேற்றுக் காலை படையினரால் சுட்டுக்கொல்லப்பட் டார்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியிலுள்ள கோரகல்லிமடு என்ற இடத்தில் உள்ளூர் அரசசார்பற்ற நிறு வனமான தடாகம் அலுவலகத்துக்கு முன்பாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

புதுக்குளத்தைச் சேர்ந்த சின்னத் தம்பி எனப்படும் இராசரத்தினம் குக னேந்திரம் என்ற 24 வயது இளை ஞரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

தம்மீது கிரனேட் வீச முயன்றவர் மீது தற்காப்புக்காகச் சுட்டபோது இவர் மரணமடைந்ததாக படையி னர் கூறியுள்ளனர். எனினும் சம்பவ நேரத்தில் இவர் அடையாள அட்டை வைத்திருக்காததாலேயே சுடப்பட்ட தாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

## மரபுவழி....

அணிகள் படையினர்மீது கிளை மோர் கண்ணிவெடித் தாக்குதல் களை மேற்கொண்டு வருகின்றன.

மரபுவழிப் படைகளையும், அர சுக்குரிய கட்டுமானங்களையும் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்பு பட்டிருக்கவில்லை.

தமிழீழ நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட வவுனியா - முள்ளிக்குளம் வலயன்கட்டில் படையினரின் ஆழ ஊடுருவும் படையணியினர் மேற் கொண்ட கிளைமோர் தாக்குதல் பார தூரமான விடயம். இதுகுறித்து விடு தலைப் புலிகளின் தலைமை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரி வித்தார்.

## ஜனாதிபதியின்...

இதேவேளை - ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கிளி நொச்சிக்கு செல்லவுள்ளதாக வெளி யான செய்தியிலும் எவ்வித உண் மையுமில்லையென ஜனாதிபதி செய லக தகவல்கள் தெரிவித்தன.

நாளை ஆரம்பம்
A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
காலை 8 மணி
D.M.I
Jaffna.
(C/4978)

புதிய யூனிவேசல் அக்கடமி
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
A/L 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
06.01.2006
வெள்ளி 4.00 p.m.
அமைதியான பாதுகாப்பான சூழலில் வகுப்புக்கள்.
(2157)

# வெளிநாட்டு ஊடகங்களுக்கு செய்திகள் வழங்கத் தடை

## பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு—

மோசமடைந்துவரும் பாதுகாப் புச் சூழல் தொடர்பாக நேற்று முன் தினம் விசேட பாதுகாப்புச் சபைக் கூட் டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரியவரு கிறது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிவரை சுமார் 4 மணித்தியாலங் கள்வரை நீடித்த இந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமை தாங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற இந்தக் கலந்தாலோசனைக் கூட்டத்தில் படையினரின் கட்டுப்பாட் டுப் பிரதேசங்களிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்க ளிலும் எடுக்கப்படவேண்டிய பாது காப்பு விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

சர்வதேச ஊடகங்களுக்கு செய்தி களை வழங்குவதைப் படை அதிகாரி கள் தவிர்ப்பது என்றும் முடிவு எடுக் கப்பட்டுள்ளது.

# புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும்படி எரிக் சொல்ஹெய்மிடம் அரசு கோரும்!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா



கொழும்பு—

நோர்வே அபிவிருத்தி அமைச்சரும், இலங் கைக்கான விஷேட தூதுவருமான எரிக்சொல் ஹெய்ம் எதிர்வரும் 23ம் திகதி கொழும்பு வரும் போது - விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சு வார்த்தைக்கு வருவதற்கான அழுத்தத்தைக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளவிருப்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள் ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் அரசாங்கத்தின் ஊடகப் பேச் சாளர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நேர்மையான தீர்வொன்றைக் காணும் வகையில் விடுதலைப்புலிகள் பேச் சுக்கு வருவதற்கானஅழுத்தத்தை பிரயோகிக்க வேண்டுமென நாம் சொல் ஹெய்மிடம் தெரிவிக்கவுள்ளோம்.

சமாதானப் பேச்சுக்கள் ஆசியாவிலேயே நடத்தப்பட வேண்டு மென்ற அர சாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# விஜேவீரவின் மைத்துனரை கொலைசெய்வதற்கு முயற்சி!

கொழும்பு—

ஜே.வி.பியின் போட்டிக்குழுவை அண்மையில் ஆரம்பித்த டொக்டர் சுபாஸ் சந்திர பெர்னாண்டோ நேற் றிரவு கொழும்பில் கொலை முயற்சி ஒன்றிலிருந்து உயிர்தப்பினார்.

வெள்ளவத்தையில் இவர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் - எனினும் அவர் காயமின்றி உயிர்தப்பியதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி ஸ்தாபகர் றோகண விஜேவீரவினது மனைவியின் சகோ தரரான இவர் ஜே.வி.பியின் ஆரம்ப கால ஸ்தாபகர்களில் ஒருவராவார்.

அண்மையில் இவர் ஜே.வி.பி. தலைமை மீது கடுமையான குற்றச் சாட்டுக்களை முன்வைத்ததுடன் வன்முறையற்ற பாதையில் ஜே.வி. பி. என்ற அமைப்பையும் தோற்று வித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக் கது.

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடக்கூடாது

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வலியுறுத்து

சென்னை—

இலங்கைப்பிரச்சினையில் இந்தியா தலையிடக்கூடாது என இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பி.ஏ.பரதன் தெரிவித்தார்.

அகில இந்திய மாணவர் பெருமன்ற மாநாட்டு நிகழ்வில் பங்கேற்கச் சென் னைக்கு வருகை தந்த அவர் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது;-

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இடது சாரிகளின் நிலை மிகவும் தெளிவாகவே உள்ளது.

ஈரான் மற்றும் ஈராக் நாடுகளின் பிரச்சனைகளில் இந்தியா தலையிடக் கூடாது என நாம் கேட்டிருந்தோம்.

அதே போன்றதொரு நிலைப்பாட்டையே இலங்கைப்பிரச்சினை தொடர்பி லும் இடதுசாரிகளாகிய நாம் கொண்டுள்ளோம். அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

இலங்கையில் நடைபெறுவது அந்நாட்டவர்களின் உள்நாட்டுப் பிரச்சினை. இதில் இந்தியா எந்த விதத்திலும் தலையிடக்கூடாது. இலங்கைப் பிரச்சினை யில் இந்திய மத்திய அரசு தலையிடுவதை இடதுசாரிகள் ஏற்றுக்கொள்ள மாட் டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.